Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 04 2024

புதன்கிழமை செப்டெம்பர் 04, 2024 | ஒளி: 10 கதிர் 043 | பக்கம்:08 | நகரப்பதிப்பு FREE



## விவசாயிகளுக்கு தள்ளுபடி

தொடர்ச்சி P2

## "இழுத்தடிக்கவே தெரிவுக் குழு"

எந்த பிரச்சினைக்காகவாவது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவுக் குழு அமைப்பதாகத் தெரிவித்தால், அந்த விடயத்தை இழுத்தடிப்பதற்கே அந்த தெரிவுக் குழு அமைக்கப்படுகின்றது என்பதனை தெரிந்து கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும்

# "தமிழ் வாக்கு"

## அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

**அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள்**

**பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ மதிப்பதில்லை**

பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகிறார் என தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரன் அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான் என அந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனம், யாழ்ப்பாணத்தில் தமிழ் பொது வேட்பாளரின் அலுவலகத்தில் வைத்து, செவ்வாய்க்கிழமை (03) வெளியிடப்பட்டது. தொடர்ச்சி P2

## "அஸ்வெசுமவால் சமுர்த்தி மரணம்"

### எதிரணிக்கு பாய்ந்தவர் தெரிவிப்பு

அஸ்வெசும நலன்புரி திட்டத்தால் சமுர்த்தி திட்டம் இயற்கை மரணமடைந்துள்ளதாக ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சிக்கு செவ்வாய்க்கிழமை (03) சென்ற ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார சுமித்ராராச்சி,

தொடர்ச்சி P2



## நல்லடக்கம், தகனஞ் செய்தல் உரிமைச் சட்டம்

உயிரிழந்த பின்னர், ஒவ்வொரு நபர்களின் உடலங்களையும் அகற்றுகின்ற விதம் தொடர்பாகத் தீர்மானிக்கின்ற உரிமையைக் குறித்த நபருக்கே வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனது உடலத்தை அகற்ற வேண்டிய விதம் பற்றிய விருப்பத்தைத் தெரிவிக்காதவர்கள் உயிரிழக்கின்ற போது, உயிரிழந்தவரின் அபிலாசைகள் மற்றும் மத ரீதியான, கலாச்சார அல்லது தனிப்பட்ட நம்பிக்கைகளைக் கருத்தில் கொண்டு உயிரிழந்தவரின்

தொடர்ச்சி P2



## புதிய எம்.பியாக பதவிப்பிரமாணம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினராக கருணாரத்ன பரணவிதானகே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(03) பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

தொடர்ச்சி P2

## "சிறகு: சிதறடிக்க அல்ல சிறகடிக்க"

எஸ். சதீஸ்



ஜனாதிபதி வேட்பாளர் திலகரின் தேர்தல் விஞ்ஞாபனம், "சிறகு: சிதறடிக்க அல்ல, சிறகடிக்க" எனும் மகுட வாசகத்துடன் சனிக்கிழமை (07) வெளியிடப்படவுள்ளது. மலையக அரசியல் அரங்கமாகிய நாங்கள் வெல்வதற்காக் அல்ல சொல்வதற்காக களம் காண்பவர்கள்.

தொடர்ச்சி P2

## "41 இராணுவ அதிகாரிகளை விசாரிக்கும் சட்டமூலம்"

கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 41 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளும் ஏற்பாடுகளுக்காகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என சபையில், செவ்வாய்க்கிழமை (03) குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த சட்டமூலத்தை கொண்டு வர இந்த அரசாங்கத்துக்குத் தார்மீக உரிமை கிடையாது 69 இலட்சம் மக்களும் இந்த சட்டத்தைக்கொண்டுவர இந்த அரசுக்கு வாக்களிக்கவில்லை என விமல் வீரவன்ச, கெவிந்து குமாரதுங்க ஆகிய எம்.பிக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) இந்த சட்டமூலம் முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டதனை தொடர்ந்தே கடும் எதிர்ப்பை வெளியிட்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பியுமான விமல் வீரவன்ச கூறுகையில்,



உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்துக்கு அமைவாகவே உருவாக்கப்பட்டுள்ளது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவ அதிகாரிகளில் 41 பேரின் பெயர் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



## "என்னுடனேயே மக்கள் உள்ளனர்"

இனம், சாதி, மதம் அன்றி, நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தலை எதிர்கொள்வதில் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற்றாவிட்டால் 2035-2040 காலப்பகுதியில் மற்றுமொரு நெருக்கடி ஏற்படக்கூடும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற "Ask Me Anything" என்ற விசேட நிகழ்ச்சியில் திங்கட்கிழமை (02) கலந்துகொண்டார். இங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## அனுராதபுரத்தில் சஜித்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகள் நிமித்தம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அனுராதபுரம் மொஹிதீன் ஜும்மாப் பள்ளிவாசலுக்கு செவ்வாய்க்கிழமை (03) விஜயம் செய்து, துஆப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

அத்துடன், அனுராதபுரம் அருள்மிகு கதிரேசன் கோவிலில் சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிர்வாதம் பெற்றார்.



## "சேறு பூசுகின்றனர்"

எமது வெற்றிக்காக மக்கள் அணி திரண்டு கொண்டிருக்கின்ற விதத்தைக் கண்டு எதிரான குழுவினர் பதற்றமடைந்து மிகவும் கீழ்த்தரமான சேறு பூசல்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என தேசிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில், செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் அமைப்பின் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1977 தேர்தலின் பின்னர் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியவர்கள் யார் என்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். 1994இல் இருந்து இற்றைவரை அவ்விதமான தேர்தல் வன்செயல்கள் இலங்கையில் இடம்பெறவில்லை. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் இதுவரைக்கும் அவர்கள் கூறுகின்ற விதத்தில் தேர்தல் வன்செயல்களும் இடம்பெறவில்லை.

அதனால் 22ஆம் திகதியோ அதன் பின்னரோ அவர் கூறுகின்ற விதத்திலான வன்செயல்கள் பற்றி மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “இழுத்தடிக்கவே தெரிவுக் குழு”

கொரோனா தொற்றில் மரணித்த முஸ்லிம்களின் சடலங்களை எரித்தமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைப்பதாக ஜனாதிபதி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையிடம் வாக்குறுதியளித்துள்ளார். .

ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றம் நாளை (இன்று 4ஆம் திகதி) மாத்திரமே கூடும் . அவ்வாறானால் பாராளுமன்ற தெரிவுக்குழுவை ஜனாதிபதி எப்போது அமைக்கப் போகிறார்?

தெரிவுக் குழுக்களை அமைப்பதற்கு ரணில் விக்ரமசிங்க திறமைசாலி. ஏதாவது பிரச்சினை தலைதூக்கும்போது அந்த பிரச்சினையைக் குறித்த குழுவுக்குச் சாட்டிவிட்டு பிரச்சினையில் இருந்து ஒதுங்கி விடுவார். எந்த பிரச்சினைக்காகவாவது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவுக் குழு அமைப்பதாகத் தெரிவித்தால், அந்த விடயத்தை இழுத்தடிப்பதற்கே அந்த தெரிவுக் குழு அமைக்கப்படுகின்றது என்பதனை தெரிந்து கொள்ள முடியும் என்றார்.



# நல்லடக்கம், தகனஞ் செய்தல் உரிமைச் சட்டம்

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது**

உடலத்தை நல்லடக்கம் செய்ய வேண்டுமா? அல்லது தகனஞ் செய்ய வேண்டுமா? என்பதைத் தீர்மானிக்கின்ற உரிமை அந்நபரின் நெருங்கிய உறவினருக்கு ஒப்படைக்கின்ற வகையில் ஏற்பாடுகளை வகுப்பதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



## தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும்

# “தமிழ் வாக்கு”

## அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

இந்நிகழ்வில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட பொதுக் கட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

"தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைக்காகப் பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது. இப்போராட்டத்தின் ஒரு வழிமுறையாக, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகிய நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ளோம்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்பது, தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள மிகச்சிறு பகுதியினர் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு எனப்படும் இந்தக் கூட்டணி கடந்த 15 ஆண்டுகளில், உருவாக்கப்பட்ட கூட்டணிகளில் ஒப்பீட்டளவில் பெரிய அணியாகும். இது தமிழ் ஒற்றுமையின் புதிய நம்பிக்கையாகவும் எதிர்காலத் தமிழ் அரசியலுக்கான பலமான அடித்தளமாகவும் எழுச்சி பெறும்.

இன அழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுரிமைச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்களே.

இந்த நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஸ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை.

தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச் செய்கின்றன.

பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாக நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப் பறிப்பு, சிங்களபௌத்தமயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத் தரப்பு ஒரு சமாந்தரமான அரசைப்போல செயற்படுகின்றது.

அதில் வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு என்று பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டுச் சமூகத்தை நம்ப வைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமறுத்து இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு கடனாளியாகியது. எனவே, இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காக வாங்கிய கடன் சுமைதான்.

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்கப் பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன்வைக்கவில்லை.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய பா.அரியநேத்திரன் அவர்களுடைய சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான்.

எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு தள்ளுபடி

விவசாயிகளினால், விவசாய செயற்பாடுகளுக்காக வாங்கிய அனைத்து பயிர்ச்செய்கைக் கடனையும் உடனடியாக தள்ளுபடி செய்ய அரசு முடிவு செய்துள்ளது. விவசாய சங்கங்கள் பலவும் விடுத்த கோரிக்கைகளை ஏற்று விவசாயிகளுக்கு நிவாரணம் மற்றும் ஆதரவு வழங்கும் வகையில், அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# “அஸ்வெசுமவால் சமுர்த்தி மரணம்”

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கவனம் செலுத்தவில்லை என குற்றஞ்சாட்டினார்.

அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளேன் என கூறிவிட்டு சபை நடுவே சென்று எதிர்க்கட்சி பக்கத்துக்குச் சென்று ஆசனத்தில் அமர்ந்தார்.

சமுர்த்தி நலன்புரித் திட்டத்துக்கு வருடத்துக்கு 60 பில்லியன் ரூபாய் மாத்திரமே செலவானது.ஆனால் அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கு 206 பில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுச் செலவழிக்கப்பட்டுள்ளது. நலன்புரி திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டவர்கள் குறித்து அரசாங்கத்துடன் பலமுறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன்.

ஆனால் எந்த பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கவில்லை. மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசிய என்னை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் விமர்சனம் செய்கின்றனர். என்றார்.



# புதிய எம்.பியாக பதவிப்பிரமாணம்

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய தலதா அதுகோரல பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே கருணாரத்ன பரணவிதானகே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

# “சிறகு: சிதறடிக்க அல்ல சிறகடிக்க”



இந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது உரிமைக் கோரிக்கைகளைத் தேசிய கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வெற்றி பெறுவார்கள் என கருதப்படும் பிரதான வேட்பாளர்களின் கவனத்தைப் பெறும் வகையிலும் எமது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்து வருகிறோம் என திலகராஜ் தெரிவித்துள்ளார். .

எமது கொள்கைப் பத்திரம் மடகொம்பரை தோட்டத்தில் லயன் அறையில் அமையப் பெற்றுள்ள ஜனாதிபதி வேட்பாளர் காரியாலயத்தில் தொழிலாளர் தோழர்களுக்குக் கையளிக்கப்படுவதன் மூலம் பொது வெளிக்குக் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்படவுள்ளது.

**தேசிய கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வெற்றி பெறுவார்கள் என கருதப்படும் பிரதான வேட்பாளர்களின் கவனத்தைப் பெறும் வகையிலும் எமது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்து வருகிறோம்**

# “41 இராணுவ அதிகாரிகளை விசாரிக்கும் சட்டமூலம்”

69 இலட்ச மக்களாணையை பிரதிநிதித்துவப்படுத்தியே பொதுஜன பெரமுன பாராளுமன்றத்துக்குத் தெரிவானது.

மக்களாணை இன்றும் இருக்குமானால் இவ்வாறு இராணுவத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு அரசாங்கத்துக்குத் தார்மீக உரிமை கிடையாது என்றார்.

இதனையடுத்து, எழுந்த சுயாதீன எதிரணி எம். பியான கெவிந்து குமாரதுங்க, இராணுவத்தினரைப் பலிகடாவாகும் வகையில் தான் இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் நாட்டின் சுயாதீனத்துக்கு முரணானது .ஏற்க முடியாதது என்றார்.

# “என்னுடனேயே மக்கள் உள்ளனர்”

இலங்கையின் சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். ஜனாதிபதிக்கு நேரடியாக தமது கேள்விகளை முன்வைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையும் விசேட அம்சமாகும்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் ஈடுபட்டதுடன், ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சாதகமான பதில்களை வழங்கினார்.

கடவுச் சீட்டு பெறுவதில் உள்ள நெரிசலை விரைவில் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதனால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் மக்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் தாம் விரும்பிய அமைச்சரவையை நியமிக்காது, நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நியமிக்கவுள்ளதாகவும், இதற்காக மக்கள் தமக்கு விருப்பமானவர்களை புதிய பாராளுமன்றத்திற்கு அனுப்புவார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், சிறுபான்மை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ள போது, இந்நாட்டின் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு தனக்கு இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# “சேறு பூசுகின்றனர்”

அதைப்போலவே தபால் மூல வாக்காளர்களின் மனதைத் திரிபு படுத்துகின்ற விதத்திலான செய்திகளை சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்திப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தோன்றியுள்ள மக்கள் ஆதரவினை ஓரளவிற்கேனும் குறைக்க இவை மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

## “ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கிய

# ஆதரவை மறக்க மாட்டேன்”

நாட்டுக்காக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளதாகவும், அதன்படி, புதிய இலங்கையை உருவாக்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வாக்குகளைத் திருடும் நிலைக்கு ஐக்கிய மக்கள் சக்தி தள்ளப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஜே.வி.பி. கடந்த காலத்தை மறந்து விட்டது என்றும் கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்திற்குச் செல்ல முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்ல-மொனார்ஷ் இம்பீரியல் ஹோட்டலில் திங்கட்கிழமை (02) நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 73ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2 வருடங்களில் வீழ்ந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கிய ஆதரவை ஒருபோதும் மறக்க முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.




மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முதன்முறையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் உரையாற்றக் கிடைத்திருப்பது கௌரவமாகும். ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார்.

பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார். அப்போது எனக்கு 10 வயது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவை பல தடவைகள் சந்தித்திருக்கிறேன்.

நாட்டை அபிவிருத்தி செய்ய இரு கட்சிகளும் அர்ப்பணித்துள்ளன. எங்களுக்குள் வேறுபாடுகளும் இருந்தன. அதனால் நன்மை தீமை என்ற இரண்டுமே கிட்டியது. கடந்த 75 வருடங்களில் என்ன செய்தோம் என்று இன்று சிலர் கேட்கின்றனர்.

நாங்கள் என்ன சொன்னோம், செய்தோம் என்ற பட்டியல் எங்களிடம் உள்ளது. அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். அன்றைய அரசாங்கங்கள் இந்த நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்தின. நல்லதைப் போன்றே அவதூறுகளையும் ஏற்றுக்கொண்டோம். சில கட்சியினரைப் போன்று நாங்கள் வரலாறுகளை மறப்பதில்லை. எமது வரலாறு ஒரு இடத்திலும் வெறுமையானதாகவும் காணப்படவில்லை.

நாங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் எப்போதும் நாட்டைப் பற்றியே சிந்தித்தோம். 2022இல் நாட்டைப் பற்றியே சிந்தித்துச் செயற்பட்டோம். பாரம்பரிய அரசியல் தலைவர்கள் இருக்கவில்லை. ஒருபுறம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். அதன் பிறகு என்ன நடந்தது? எதிர்க்கட்சித் தலைவரைப் போன்று அனுர திஸாநாயக்கவும் பிரதமர் பதவியை ஏற்கவில்லை. இருவரும் ஓடிவிட்டார்கள்.

ஆனால் நாங்கள் ஒன்றுபட்டு ஆட்சி அமைத்தோம். 2022 ஜூலை 09 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். அதன்பிறகு, நாட்டுக்குத் தலைவர் இருக்கவில்லை. நாட்டில் அராஜக நிலை உக்கிரமடைந்து காணப்பட்டது. அன்று நாட்டுக்காக ஒன்றுபட்டதை நினைத்துப் பெருமைப்படுகிறேன் என்றார்.




## 18+ வேலைத் திட்டம்

■ ஏ.எச்.ஹஸ்பர்

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கு வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்றைச் செவ்வாய்க்கிழமை (03) முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்தார்.

அவர் குறிப்பிடுகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய 6 மாவட்டங்களில் இருந்து ஒரு மாவட்டத்துக்கு இருவர் வீதம் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர், அவர்களது மாவட்டங்களுக்குச் சென்று வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டங்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், அவர்களுக்கான பயிற்றுவிப்பு பட்டறை வவுனியா-நெல்லிஸ்டார் உணவு விடுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இப்பயிற்சிப் பட்டறை திங்கள் (02) மற்றும் செவ்வாய் (03) கிழமைகளில் நடைபெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## “விழிப்புணர்வு அதிகரிப்பது”

■ மு.தமிழ்ச்செல்வன்

தொழுநோய் என்பது ஒரு தொற்று நோய் இது எளிதில் சுவாசம் மூலம் பரவக்கூடியது. ஆனால், அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, இந்த சிகிச்சை மேற்கொண்டால் முழுமையாகக் குணமடையக் கூடியது. இலங்கையில் தொழு நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க விழிப்புணர்வு அதிகரிப்பது அவசியம் என வவுனியா இந்து குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் சுப்ரமணிய சர்மா குருக்கள் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தொழுநோய் முகாமைத்துவம், மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாடு எனும் தொனிப்பொருளில் வவுனியா பிரதேச செயலகம், காவேரி கலா மன்றம் மற்றும் மாற்று மக்கள் சபை ஆகியன இணைந்து நடாத்திய மாநாட்டில் இணைந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்

போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், தொழு நோயின் முக்கிய அறிகுறிகளாகத் தோலின் மேற்பரப்பில் கட்டிகள் மற்றும் வெளிறிய நிறத்தில் தேமல் காணப்படும். அவை உணர்ச்சியற்றவையாக ரோமங்கள் அற்றவையாகக் காணப்படும். சில சந்தர்ப்பங்களில் நரம்புகள் மரத்துப் போகின்ற கை, கால் உணர்ச்சியற்ற நிலை ஏற்படுகின்ற நிலையும் ஏற்படலாம். இவை அறிகுறிகளாகக் காணப்படும்.



**“ நோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படும் நிலையைத் தவிர்ப்பதற்கு அனைவரும் தொழுநோய் தொடர்பாக அறிந்து மக்களை விழிப்புணர்வுடன் வைத்திருப்பது இன்றியமையாதது**


இவ்வாறான அறிகுறிகள் காணப்படுமாயின், உடனடியாக மருத்துவச் சிகிச்சை பெறுவது அவசியம் இலங்கையில் இலவச சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன எனவே பயப்படாமல் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்யவும்.

நோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படும் நிலையைத் தவிர்ப்பதற்கு அனைவரும் தொழுநோய் தொடர்பாக அறிந்து மக்களை விழிப்புணர்வுடன் வைத்திருப்பது இன்றியமையாதது.

தொழு நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்று நம் சமூகத்தைக் காப்போம் என்றார்.

## கேரளா கஞ்சா, ஐஸுடன் ஆரையம்பதியில் இருவர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு-காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் கேரளா கஞ்சா, ஐஸ் போதைப்பொருளுடன் 32, 38 வயதுகளுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகளால் திங்கட்கிழமை(02) மேற்கொண்ட திடீர் தேடுதலின் போது, குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின், ஒருவரிடம் இருந்து ஒன்றரை கிலோ கேரள கஞ்சாவும் மற்றவரிடம் இருந்து 25,000 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய கையடக்க தொலைபேசியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இப்பிரதேசத்தில் நீண்ட நாட்களாகப் போதைப்பொருள் விற்பனை செய்து வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களும் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

### அவுஸ்திரேலியாவிலிருந்து

## அரியநேத்திரனுக்கு நிதி பங்களிப்பு

தமிழர்கள் சார்பில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

சிட்னியிலிருந்து இயங்கும் 24 மணி நேர சமூக வானொலியான தாயகம் தமிழ் ஒலிபரப்பு தனிப்பட்ட தமிழ் பேசும் அவுஸ்திரேலியர்கள் வழங்கிய பங்களிப்புகளை ஒன்று திரட்டி பத்து இலட்சம் ரூபாய்களைத் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பிடம் கையளித்திருக்கிறது.

இந்தப் பங்களிப்பு குறித்துக் கருத்துத் தெரிவித்த தாயகம் வானொலியின் நிர்வாக இயக்குநர் விஜய் இராஜகோபால், “தமிழர்களின் பொது வேட்பாளர் என்பது வடக்கு - கிழக்கு தமிழர்கள் மட்டுமன்றி, மற்றைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களும் தமது எதிர்காலம் குறித்து ஒருமித்த குரலில் பேசக் கிடைத்த சிறந்த வாய்ப்பு இது” என்று தெரிவித்தார்.

“எமது நேயர்கள் தொடர்ந்து விடுத்த வேண்டுகோள்களை அடுத்து, அவர்களது பங்களிப்புகளை ஒன்று திரட்டி அனுப்ப நாம் முன்வந்தோம். பங்களித்தோருக்கும் இம்முயற்சியில் அனுசரணை செய்த ஈழத்துத் தமிழர் கழகத்துக்கும் நாம் நன்றி சொல்கிறோம்.

வையகம் தழுவிய வானொலித் தோழனான தாயகம் வானொலி

**“ தமிழர்களின் பொது வேட்பாளர் என்பது வடக்கு – கிழக்கு தமிழர்கள் மட்டுமன்றி, மற்றைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களும் தமது எதிர்காலம் குறித்து ஒருமித்த குரலில் பேசக் கிடைத்த சிறந்த வாய்ப்பு இது**

ஊடாக பொது வேட்பாளர் குறித்த விபரங்களை நேயர்களுக்கு வழங்கும் வகையில், எம்முடன் இணைந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.விவிக்னேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறீகாந்தா, பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், சமூக செயற்பாட்டாளர்கள் ஏ.யதீந்திரா, பி.ஐங்கரநேசன் மற்றும் செல்வின் இரேனியஸ் ஆகியோருக்கும் எமது நன்றிகள்” என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு சார்பில் கருத்துத் தெரிவித்த அமைப்பாளர்களில் ஒருவர், “அனைத்துலக வானொலி மூலம் தமிழர்களின் பொது வேட்பாளர் குறித்த கருத்துகளைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் தாயகம் வானொலிக்கு எமது நன்றி. நிதிப் பங்களிப்புச் செய்த ஒவ்வொருவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

## நீரோடையில் விழுந்த லொறி

■ செ.தி.பெருமாள்



ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை (03) தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வீதியை விட்டு விலகி, டெவோன் பகுதியில் உள்ள நீரோடையில் விழுந்துள்ளது.

இச் சம்பவத்தில் சிறு காயங்களுக்குள்ளான சாரதி, கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் தொடர் மழையால் வீதி ஏற்பட்ட வழுக்கள் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் லிந்துலை- பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தூதுவருடன் சந்திப்பு...



இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் - கஹ்தானியை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமட் மற்றும் முஸ்லிம் திணைக்கள உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். முப்தி முர்ஸி ஆகியோர் தூதுவரின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ அலுவலகத்தில் திங்கட்கிழமை(02) சந்தித்தனர்.





## கர்நாடக இசை

■ வி.ரி.சகாதேவராஜா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி, கர்நாடக இசைக் கச்சேரி ஒன்று நடத்தியது.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாகக் கிழக்கு பல்கலைக்கழக இசைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீவிக்ரமகீர்த்தி கிருபாஞ்சனா கேதீஸ் கலந்து சிறப்பித்ததுடன், இந்தியாவில் இசைத் துறையில் முது மாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண் (வாய்ப்பாட்டு ), சுதாகரன் கோவிசரண் ( மிருதங்கம் ), பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக் கச்சேரியை ஒன்றரை மணி நேரம் நடத்தினர்.

# போர் ‘இடைநிறுத்தம்’ போர் நிறுத்தமாகி, சமாதானம் மலர வேண்டும்

யுத்தமொன்று இடம்பெறும் போது, ‘போர்நிறுத்தம்’ ஏற்படும்போதுதான், இரு தரப்புகளையும் சார்ந்த சாதாரண மக்கள் அடையும் சந்தோஷத்துக்கு அளவே இருக்காது. வலியை உணர்ந்தவர்களால் மட்டுமே அந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். எனினும், போர் நிறுத்தத்திலும் தாக்குதல்கள் இடம்பெறாமல் இல்லை.

யுத்த வலயத்துக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களுக்கு உணவு, மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இவ்வாறு தற்காலிக ‘இடைநிறுத்தம்’ செய்யப்படுகிறது. அவ்வாறுதான் காசாவில், குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்தை வழங்குவதற்காக, மூன்று நாள் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. சனிக்கிழமை(31) ஆரம்பமான போர் நிறுத்தம், திங்கட்கிழமை (02) உடன் நிறைவடைந்தது.

போரினால் பாதிக்கப்பட்ட காசாவில் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு கொடுப்பதையொட்டி, போர் இடைநிறுத்தத்துக்கு இஸ்ரேல் இராணுவம் மற்றும் ஹமாஸ் அமைப்பு சம்மதம் தெரிவித்து இருந்தாலும், ஆங்காங்கே தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகச் சர்வதேச செய்திகள் தெரிவித்திருந்தன. எனினும், குழந்தைகளின் வருங்காலத்தைக் கவனத்தில் எடுத்து, சகல குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் வரையில், போர் நிறுத்தம் செய்வதில் தவறில்லை.

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் காசாவில் போலியோ நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது, போர் காரணமாகத் தடுப்பூசி விநியோகம் நிறுத்தப்பட்டிருக்கிறது. மனிதாபிமானத்தின் அடிப்படையில் போர் நிறுத்தத்தை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று ஐ.நா. சார்பில் வலியுறுத்தப்பட்டது. இதையடுத்து, பல்வேறு பகுதிகளில் மூன்று நாட்கள் போர் நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. .

இந்த மூன்று நாட்களில் காசா பகுதி முழுவதும் சுமார் 6.4 இலட்சம் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்தை ஐ.நா. சுகாதார ஊழியர்கள் மற்றும் பிற உள்ளூர் சுகாதார ஊழியர்கள் செலுத்துவார்கள். போலியோ சொட்டு மருந்து கொடுக்க 2,000 க்கும் மேற்பட்டவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களுக்குள் இந்தப் பணியை முடிக்க முடியாமல் போனால், மேலும் ஒரு நாள் தேவைப்படும் என்றும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

போலியோ நோய்க்குத் தடுப்பூசியை 1952ஆம் ஆண்டில், ‘ஜோனஸ் சால்க்’ (*Jonas Salk*) என்ற அமெரிக்க மருத்துவர், கண்டுபிடித்தார். அவர், தான் கண்டுபிடித்த உயிர்காக்கும் தடுப்பூசிக்கான, காப்புரிமை வேண்டாம் என மறுத்துவிட்டார். தனது கண்டுபிடிப்பு, சூரியனுக்கு ஒப்பானது. அனைவருக்கும் பயனளிக்க வேண்டியது. சூரியனுக்குக் காப்புரிமை கேட்க முடியுமா? என்று அதை மறுத்தவர் சால்க்.

அதன்பின்னர், 1957ஆம் ஆண்டு, ‘ஆல்பர்ட் சாபின்’ (*Albert Sabin*) என்ற மற்றொரு அமெரிக்க மருத்துவர் இதே நோய்க்குத் தடுப்பு சொட்டு மருந்தைக் கண்டுபிடித்தார். குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பூசியைப் போடுவதை விட, சொட்டு மருந்தைக் கொடுப்பது எளிதாகவும், செலவு குறைவாகவும் இருந்தது. இதனால், ‘குழந்தைகளுக்கு முறைப்படி போலியோ சொட்டு மருந்து கொடுத்தால், நோயைத் தடுக்கலாம்’ என்னும் விழிப்பு உணர்வை மக்களிடம் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்ட போர் ‘இடைநிறுத்தம்’ போர் நிறுத்தமாகி, சமாதானம் மலர வேண்டும் என்பதே சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கூண்டுக்குள் இருந்த பறவைக் குஞ்சுகள், அவை வெளியேறும் காலம் வந்த பின்பு தங்கள் சின்னச் சிறகுகளை அடித்த வண்ணம் சுதந்திரமாகப் பறக்கின்றன. ஆனால், மனிதர்களில் அநேகமானவர்கள் பரந்த உலகைப் பார்க்காமல், ரசிக்காமல் வீட்டுக்குள் முடங்கிய படி இருக்கின்றனர். எல்லோரும் வெளிநாடுகளுக்குப் போகும்படி அர்த்தம் இது அல்ல. உலகம் பற்றிய அறிவு, மக்கள் பற்றிய ஆர்வம், எழுச்சி மிகு தகவல்களை அறியாமல் வாழ்வது துரதிர்ஷ்டமானது.

ஒரு கிராமத்து மனிதர் எனக்கு சொன்னார், “நான் யாழ்ப்பாண நகரத்துக்கே போனதில்லை… எங்கள் ஊரிலேயே இருக்கின்றேன்… விவசாயம் செய்கின்றேன்..” என்றார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து கொண்டு, வடக்கின் பிரதான நகரமான யாழ்ப்பாணம் போவதில்லை என்று சொல்வது அதிசயம் அல்லவா? எப்போதாவது ஒரு சில சமயம் சென்றிருப்பார். தற்போதைய நிலை தெரியாமல் வாழும் நபர்களும் உண்டு.

வானொலியில் கூட செய்தி கேட்காதவர்கள் இருக்கின்றனர். கல்வியறிவு இல்லாதவர்கள் கூட, உலக அறிவை விரும்புகின்றனர். பொது அறிவு கூட கல்வி தான். உலகை அறிவதில் ஏது தயக்கம்?

நன்றி–பருத்தியூர் பாலவயிரவநாதன்

# தமிழரசுக் கட்சியின் முடிவுக்கான அடிப்படை என்ன?



எம்.எஸ்.எம்.ஐயூப்

செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவைத் தெரிவிக்க இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு முடிவு செய்ததாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனை மேற்கோள்காட்டி ஊடகங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டு இருந்தன. இது ஒரு முக்கிய செய்தியாகவே தெரிகிறது. ஏனெனில், கடந்த சில மாதங்களாக தெற்கில் பல்வேறு கட்சித் தாவல்கள் மற்றும் புதிய கூட்டணிகளை உருவாக்குதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. எனினும், அவற்றின் எந்தவொரு தனிச் சம்பவமும் தேர்தல் முடிவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. ஆனால், தமிழரசுக் கட்சியின் இந்த முடிவு ஏகமனதாக இருந்தால் அதேபோல், தமிழ் மக்கள் இந்த முடிவை ஏற்கும் நிலையிலிருந்தால் அது எந்தவொரு தேர்தல் முடிவையும் மாற்றக் கூடியதாகும்.

ஏனெனில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 20 இலட்சத்துக்கு மேலாக வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றனர். அவர்களில் சுமார் 9 இலட்சம் வாக்காளர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். ஆயினும், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிய கருத்தை ஆராயும் போது, இம்மாகாணத்தில் 6 இலட்சம் வாக்காளர்களின் முடிவைப் பற்றியே தமிழ் தலைவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சிலவேளை, அவர்கள் செல்லுபடியாகும் வாக்குகளை அனுமானித்து அவ்வாறு கூறியிருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 12 இலட்சம் வாக்காளர்கள் இருந்த போதிலும், அம்மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கின்றனர். எனவே, தேர்தல்களின் போது, வட மாகாணத்திலேயே தமிழ் தலைவர்களால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். தமிழரசுக் கட்சியே பிரதான தமிழ் அரசியல் கட்சியாகக் கருதப்படுவதால் அவர்கள் எடுக்கும் முடிவு மிகவும் முக்கியமானதாகும்.

ஆயினும் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு ஏகமனதாக இந்த முடிவை எடுத்ததா என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது. அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் சிலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும் சில செய்திகள் கூறின. அதேவேளை, இது மத்தியக் குழுவின் ஏகமனதான முடிவு அல்ல என்று சேனாதிராஜா கூறியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழரசுக் கட்சி இதற்கு முன்னர் செய்ததைப் போலலே இம்முறையும் பெரும்பான்மையின வேட்பாளர் ஒருவருக்கு தமது ஆதரவைத் தெரிவிக்க தமது வழமையான நிபந்தனைகளை விதித்திருந்தது. அதாவது, இனப் பிரச்சினைக்கு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை ஏற்பவருக்கு தமது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்து இருந்தது. இம்முறை சுமந்திரன் அதனைக் கடந்த மாதம் 13ஆம் திகதி தெரிவித்திருநந்தார்.

போர் முடிவடைந்த உடனேயே 2010இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போரின் போது, இராணுவத்தை வழிநடத்திய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவுக்கு அதன் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இதற்கு நியாயமான காரணம் இல்லா விட்டாலும், நியாயமானதாகத் தென்படும் காரணமொன்று இருந்தது.

போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் வடக்கு கிழக்கில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அக்காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 2010இல் மஹிந்தவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். அவருக்கான அந்த எதிர்ப்பையே தமிழ் மக்கள் பொன்சேகாவுக்கு வாக்களித்ததன் மூலம் காட்டினர்.

மஹிந்த மனித உரிமை விடயத்தில் வெறுக்கப்பட்டாலும் களத்தில் உண்மையிலேயே மனித உரிமைகளை மீறியவர் இராணுவத் தளபதியாக இருந்த பொன்சேகாவே என்ற விடயம் அப்போது புறக்கணிக்கப்பட்டது.

2015இல் மஹிந்தவும் மைத்திரிபாலவுமே பிரதான வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். மைத்திபாலவுக்கு தமிழ் மக்கள் அளித்த பெரும்பான்மை வாக்குகளால் அவ்வாண்டும் ராஜபக்ஷ எதிர்ப்பு அலையே வடக்கு கிழக்கில் காணப்பட்டது.

2019இல் பிரதான வேட்பாளர்களாக கோட்டாபயவும் சஜித் பிரேமதாசவும் போட்டியிட்டனர். ராஜபக்ஷக்களில் ஒருவரான கோட்டா சிறுபான்மை மக்களால் வெறுக்கப்பட்டவர் என்பதால் தமிழ் மக்கள் அம்முறை சஜித்துக்கு வாக்களித்தனர்.

அத்தேர்தல்களில் போல், இம்முறை தமிழரசுக் கட்சிக்கு முடிவு எடுப்பது இலகுவானதாக இருக்கவில்லை. ஏனெனில், இம்முறை ஜனாதிபதித் தேர்தல் இருமுனைப் போட்டியாகவில்லை. இது நான்கு முனைப் போட்டியாகவே தென்படுகிறது. அந்த பிரதான நான்கு வேட்பாளர்களில் ராஜபக்ஷக்களில் ஒருவரான மஹிந்தவின் மகன் நாமலை எடுத்த எடுப்பிலேயே ஒதுக்கி விடலாம். ராஜபக்ஷக்களுக்கு இன்னமும் சிறுபான்மை மக்கள் மத்தியில் எந்தவித வரவேற்பும் இல்லை.

ஆனால், மற்ற மூவரில் எவரும் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை ஏற்காத போதிலும், அவர்கள் தமிழ் மக்களால் அவ்வாறு வெறுக்கப்பட்டவரல்லர். அதேவேளை, இதற்கு முன்னர் எதிர்நோக்காத ஒரு பிரச்சினைக்கும் தமிழரசுக் கட்சி இம்முறை முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. அதாவது, சில தமிழ் கட்சிகள் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை இம்முறை போட்டியில் நிறுத்தியிருக்கின்றன. அதுவும் தமிழரசுக் கட்சியேச் சேர்ந்த ஒருவரையே நிறுத்தியிருக்கின்றன.

இதற்கு முன்னரும் முன்னாள் சிவாஜி லிங்கம் எம்.பி. ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டுள்ளார். ஆனால் அவர், தனி நபராகவே அப்போது போட்டியிட்டார். இம்முறை சில தமிழ் கட்சிகளின் கூட்டு முடிவாகவே முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் களத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் என்ற பிரச்சினையும் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற பிரச்சினையும் கடந்த டிசம்பர் மாதம் முதல் தமிழ் ஊடகங்களில் ஆராயப்பட்டு வந்துள்ள நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆர்வம் அதிகரித்துள்ளது. அது தமிழ் மக்கள் மத்தியில் உணர்ச்சிகரமானதாகவும் மாறி வருகிறது.

எனவே, இதனை இம்முறை தமிழரசுக் கட்சியாலும் முற்றாகப் புறக்கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அது தமிழரசுக் கட்சிக்குள்ளும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிகிறது. எனவே, சஜித்துக்கு கடந்த முறை போல, தமிழர்கள் வாக்களிப்பார்களா என்பது சந்தேகமே.

தென் பகுதி வேட்பாளர்கள் எவரும் தமிழ் தலைவர்களின் கோரிக்கைகளை ஏற்க மாட்டார்கள் என்பது தமிழரசுக் கட்சிக்குத் தெரியும். அவ்வாறிருக்க, இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டித் தீரவை ஏற்கும் பிரதான வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவோம் என்று சுமந்திரன் ஏன் கடந்த 13ஆம் திகதி அறிவித்தார்? சஜித் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டாரா?

கடந்த ஜூன் மாதம் சஜித் யாழில் சுமந்திரனை சந்தித்திருந்தார். அப்போது சஜித்தின் குழப்பமான நிலைப்பாட்டினாலோ என்னவோ அதிகார பரவலாக்கலைப் பற்றித் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துங்கள் என்று சுமந்திரன் சஜித்திடம் கூறியிருந்தார்.

இனப் பிரச்சினை விடயத்தில் ரணிலே தமிழ் தலைவர்களுக்கு மிகவும் நெருங்கிய தென் பகுதி அரசியல்வாதியாவார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசியலமைப்பொன்றில் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ரணில் முயன்றார். அந்த முயற்சி நேர்மையானதா இல்லையா என்பது வேறு விடயம்.

அதேவேளை, 2015 இல் மனித உரிமை பேரவையின் பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் சம அனுசரணை வழங்கியதற்கு ரணிலே காரணமாக இருந்தார். அக்காலத்தில் பல தமிழ் புலம் பெயர் அமைப்புக்கள் மீதான தடையும் நீக்கப்பட்டது.

எனினும், மாகாண சபை முறை முடங்கிப் போவதற்கு ரணிலே காரணமாக இருந்தார். இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கடந்த வருடம் பல கூட்டங்களைக் கூட்டி அவர் இறுதியில் தமிழ் தலைவர்களை ஏமாற்றினார். கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் காலஞ்சென்ற இரா.சம்பந்தன் ரணிலிடம் நேரடியாகவே இதனைத் தெரிவித்தார். ரணில் ஏமாற்றினார் என்ற இதே கருத்தை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனும் கடந்த மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கூறியிருந்தார்.

இனப் பிரச்சினையை ஒருபுறம் வைத்துவிட்டு தென் பகுதி வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதாக இருந்தால் நிச்சயமாகப் பொருளாதார காரணங்களின் அடிப்படையில்தான் தெரிவு செய்ய வேண்டியிருக்கும். ஏனெனில், அது தமிழ் முஸ்லிம் மக்களையும் பாதிக்கிறது. வெற்றிபெறக்கூடிய மூன்று வேட்பாளர்களும் அந்த விடயத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள். ஆயினும், ஊழலை ஒழிப்பதற்கான முயற்சியில் தேசிய மக்கள் சக்தி முன்னணியில் இருப்பதாகத் தெரிகிறது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை உற்று நோக்கினால் அது ஊழல் மலிந்த பழைமைவாத குழுவுக்கும் சமூக மாற்றம் ஒன்றுக்கான முயற்சிக்கும் இடையிலான போராட்டமாகவே தெரிகிறது. இந்த நிலையிலேயே தமிழரசுக் கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது.

## கடிதங்கள்

### திணைக்களம் தயாரில்லை

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான குளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றிற்கு எல்லை கற்கள் இட்டு அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எல்லைக் கற்கள் கொள்வனவு செய்யப்பட்டு தயாராக உள்ள போதும் அவற்றினை கொண்டு குளங்களுக்கு எல்லையிடுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தயாராக இல்லாதிருப்பது கவலையளிக்கிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கனகாம்பிகைகுளம் அதன் பின்பகுதியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 25 ஏக்கர் வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிது புதிதாகச் சிலர் மண் நிரப்பி குளங்களை ஆக்கிரமித்து வருகின்றனர்.

இது எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தம் உட்பட மிக மோசமான சுற்றுச் சூழல் பாதிப்பினை ஏற்படுத்தும். வனவளத்திணைக்களம் தங்களின் காடுகளைப் பாதுகாக்க எல்லைக் கற்களைப் பதித்தது போன்று குளங்களுக்கும் எல்லைக் கற்களைப் பதிக்க வேண்டும். குளங்களைப் பாதுகாக்கும் அக்கறையுடன் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொது மக்கள் கோரியுள்ளனர்.

– மு.தமிழ்ச்செல்வன்



## இலவசக் கல்விக்கு

# மலர் வளையம்





காஞ்சனா தேவி கிருபாகர்
இலங்கை ஆசிரியர் சங்க கண்டி மாவட்ட பிரதி செயலாளர்
ஆலோசகர், அறிவிப்பாளர் (SLBC)
(MPhil (Geo) , BSc (uons) coun & Psy, Dip in Pub Law
PGD(Education), PGD (Water Management)

கல்வி என்பது ஒருவருடைய உடல், உள வளர்ச்சியுடன் அறிவு, நல்லொழுக்கம் ஆகியவற்றை மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பாகும். இளைய சமூகத்தை முறையாக வழி நடத்துவதற்கு, அவர்களை சமுதாயத்தில் பங்குகொள்ள வைப்பதிலும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவும் கல்வி அமைகின்றது. இவ்வாறான சிறப்பு வாய்ந்த கல்வியானது இலங்கையைப் பொறுத்தவரை, ஆரம்பக் காலங்களிலிருந்த மதிப்பினை உள்நாட்டிற்குள்ளும், சர்வதேசத்திலும் இழந்து வருவதை அவதானிக்கலாம். அது மட்டுமல்லாது, கல்விக்கான தேவை என்பது நம்மவரிடையே குறைவடைந்து வருகின்றது. இதற்காக பல்வேறு காரணிகளை முன்வைத்தாலும், இந்நிகழ்வின் ஆரம்ப காரணிகளாக கொவிட் வைரஸ் தொற்று மற்றும் நாட்டின் பொருளாதார பிரச்சினை என்பவற்றைக் குறிப்பிடலாம். 2020ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட் தொற்றானது, இலங்கையின் கல்விச் செயற்பாட்டைச் செயலிழக்கச் செய்ததோடு, அதில் பின்தங்கிய நிலையினையும் தோற்றுவித்தது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், ஆசிரியர்களின் முயற்சியின் காரணமாக உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படுவது போல் இலங்கையிலும் நிகழ்நிலை கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எவ்வாறாக இருப்பினும், இலங்கை போன்றதொரு அபிவிருத்தியடைந்து வருவதும், இலவசக்கல்வி முறையினை கொண்டதுமான நாட்டிற்கு இந்நிலைமை பொருத்தமற்றதாக உணரப்பட்டதோடு, அதனால் கல்வியில் மட்டுமல்லாது, மாணவர்களது விழுமியப்போக்குகளிலும் குடும்ப கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியதோடு, தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகின்றதையும் நாம் காணலாம்.

2021ஆம் ஆண்டு நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து கல்வித் துறையானது நேரடியான மற்றும் மறைமுகமான பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றமை நாட்டின் கல்வியில் மட்டுமல்லாது, எமது இளைஞர் சமூகத்தினையும் கேள்விக்குறியாக்குகின்ற நிலையினையும் தோற்றுவித்துள்ளது. எனவே, 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாகத் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்கள் முறையான ஆரம்பக் கல்வியைப் பெறமுடியாத தன்மையானது, எதிர்வரும் காலங்களில் எதிர் விளைவுகளைச் சந்திக்கும் என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை அரசானது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினை 16 தடவைகள் பெற்றுள்ளதோடு, இதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏழு தடவைகள் இந்த நிதியத்தின் உதவிகளை நாடியுள்ளார். இலங்கை வங்குரோத்து நாடாக அறிவிக்கபட்டுள்ளமையால், நாணய நிதியத்தின் சட்டதிட்டங்களை ஜனாதிபதி அவர்கள் நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலைமையின் கீழ், சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான சட்டங்களான சிக்கன கொள்கை மற்றும் வரி அதிகரிப்பு என்பவற்றை நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். இவ்விரு கொள்கைகளும் இலங்கையின் இலவச துறைகளான கல்வி, சுகாதாரம் என்பவற்றில் நேரடியான மற்றும் மறைமுகமாகத் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

இதில் முக்கியமாக கல்வித்துறையை நோக்குவோமாயின், 2023ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள கல்விக் கொள்கையானது முழுமையாகச் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு அமைவாக வரையப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். கல்விக் கொள்கை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட கலாநிதி அர்ஜூன பராக்கிரம அவர்கள், “இலவசக் கல்வியின் சாவு” என இதனைக் குறிப்பிட்டுள்ளார். கல்வியாளர்களின் ஒத்துழைப்பின்றி, தனியார்த் துறையின் வளர்ச்சியில் பங்கெடுக்கும் நபர்களை அடிப்படையாகக் கொண்ட குழுக்களின் அனுசரணையுடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கல்விக் கொள்கையானது, முழுமையாக நவ தாராண்மை வாதத்தின் வளர்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது.

அதாவது இல்லாதவர் செலவில் இருப்பவர் வாழ்தல் எனும் முறை கல்வியிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நாணய நிதியத்தின் செயற்பாடுகள் நலத்திட்டங்களை எதிர்ப்பதால் இலவசமாகக் கிடைக்கப்பெற்ற கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் குறைக்கப்பட்டுள்ளதை நிதி ஒதுக்கீடுகள் உறுதி செய்கின்றன.

2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் படி

* கல்விக்காக 23,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில்
* பாடசாலை கல்விக்காக 17,630 கோடி ரூபாயும்
* உயர்கல்விக்கு 5,570 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை கல்விக்காக ஒதுக்கப்பட்ட 17,630 கோடியில் ஆசிரியர்களின் சம்பளமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் கல்விக்காக ஒதுக்கிடப்பட்டுள்ள தொகையானது மிகமிக குறைவானதாகும். எனினும், யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள, அசம்பாவிதங்கள், நிகழாத இலங்கையின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையினை நோக்குவோமாயின்,

* பாதுகாப்புச் செலவு 39,070 கோடி ரூபாயும்,
* பொது பாதுகாப்பிற்காக 1,990 கோடி ரூபாயும்,
* பொலிஸ் நிலையங்களுக்கு 12,920 கோடி ரூபாயும்

என 53,980 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது

இலங்கையில், 396 தேசிய பாடசாலைகளும், 9,730 மாகாணப் பாடசாலைகளுமாக மொத்தமாக அரச பாடசாலைகள் 10,155 காணப்படுவதோடு, இவற்றுள் உயர்தர வகுப்பு உள்ள பாடசாலைகள் 3,204 ஆகும். இங்கு 41 இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அத்துடன், இப்பாடசாலைகளில் 249,494 (2020) ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். அதுமட்டுமல்லாது, 17 பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. இவை அனைத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதா என்பது கேள்விக்குறியாகும். கல்வியில் சிக்கனத்தைப் பேணுவதனால் ஏற்படப்போகும் விளைவுகளும் ஏராளம்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கிணங்க அரசாங்கம் முன்னெடுக்கும் வரி கொள்கைகள் உணவு, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி போன்ற முக்கியமான துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உணவிற்கான பணவீக்கம் 80 சதவீதமாக இருப்பதனால் நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்ததோடு, அத்தியாவசிய தேவைகளுக்கான விலையும் அதிகரித்துள்ளது. எனவே, பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான காகிதாதிகள் விலைகள் மட்டுமல்ல, அவர்களது பாடசாலை உபகரணங்களின் விலைகளும் 3-4 மடங்குகளால் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையானது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களின் கல்வி தேவையை முழுமையாகத் தடை செய்யும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் கொள்கை மாற்றத்திற்கு அமைவாக எதிர்காலத்தில் 14 இலட்சம் மாணவர்கள் இடைவிலகல் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இவர்களுக்கான கல்வி உரிமைகள் பறிபோகும் நிலையும் தோன்றியுள்ளது. அரச பாடசாலை ஒன்றிற்கு தமது பிள்ளையை அனுப்புவதற்காகப் பெற்றோருக்கு வருடத்திற்கு ஏறத்தாழ 15,000 ரூபாய் தேவைப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் மூன்று பிள்ளைகள் கல்விகற்கும் வீட்டின் நிலைமை எவ்வாறானது என்பதை எம்மால் ஊகிக்கலாம். இத்தொகையானது உயர்கல்வியை நோக்கிச் செல்லும்போது, அதிகரிக்கும் என்பது நாம் அறிந்ததே. ஒரு பிள்ளைக்குப் பாடசாலை தேவை மட்டுமல்ல, போக்குவரத்து, உணவு என பார்க்கும் போது, சாதாரண பெற்றோரால் தாங்க முடியாத தன்மை நிலவுகின்றது.

கணிப்பீட்டின் படி, 35 சதவீதமான இலங்கை குடும்பங்களுக்கு உணவில்லாத நிலை காணப்படுவதால் அவர்களின் கல்விக்கான தேவை குறைக்கப்படும் என்பது நிச்சயமாகும். தற்போது வரை பாடசாலை மாணவர்களில் 4 வீதமானவர்களும், உயர் கல்வியில் 0.9 வீதமானவர்கள் இடை விலகியுள்ளனர். பாடசாலைக்கு தேவையான சாதனங்களை வாங்க முடியாத தன்மையினால் இன்மையினால் 2 சதவீதமானவர்கள் பாடசாலை கல்வியை துறந்துள்ளனர்.

உலக வங்கியின் கணிப்பின்படி, இலங்கையின் வறுமை மட்டமானது 2021ஆம் ஆண்டு 13.1 வீதமாகவும், 2022ஆம் ஆண்டு 25.6 வீதமாகவும் மதிப்பிட்டுள்ளது. நகரங்களில் வறுமை 15.1 வீதமாகவும், கிராமங்களில் 26.3 வீதமாகவும், மலையகத்தில் 53.7 வீதமாகவும் காணப்படுவதாக உலக வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. பசியின் கொடுமை கல்வியில் கை வைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. அதிலும், பொருளாதாரத்தின் தாக்கம் மலையக கல்வியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. கடந்த சில ஆண்டுகளாக மலையக கல்வியில் வளர்ச்சி ஏற்பட்டு அப்பகுதி இளைஞர்கள் விழிப்புணர்வுடன் செயல்படும் மறுமலர்ச்சி காலம் எங்கே மலராது கறுகி விடுமோ என்ற பயம் எனக்கு தோன்றுகிறது.

வறுமை 50 சதவீதத்தை தாண்டிய நிலையில், பொருட்களின் விலை அதிகரிப்பு, வறுமை,போக்குவரத்து இன்மை, சத்துணவின்மை போன்ற பல காரணிகளால் ஆரம்பப் பிரிவில் 4 வீதமான இடைவிலகளையும், இடைநிலைப் பிரிவில் 20 வீதமான இடைவிலகளையும், கல்லூரி மட்டத்தில் 26 வீதமான இடைவிலகளையும் அவதானிக்கலாம் என *Institute of Policy study* குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், 2025ஆம் ஆண்டு பூச்சி சிறுவர் தொழிலாளர் இலக்கு என்பதை வெறும் கனவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

(வியாழக்கிழமை தொடரும்...)

# உப்பு வயல்...





சொக்கலிங்கம் லோகினி,
ஊடக ஆய்வுகள்
மூன்றாம் ஆண்டு,
யாழ். பல்கலைக்கழகம்.

புத்தளம் என்ற பெயர் உருவான வரலாறு ஆரியர் காலமானது. இந்த புத்தள மண்ணில் உப்பு விளைந்ததால் ஆரம்பக் காலங்களில் இது உப்பளம் என்றே அழைக்கப்பட்டதாகவும் பின்னரான காலங்களில் இந்த உப்பளம் என்ற பெயர் மருவி புத்தளம் என்று அழைக்கப்பட்டதாகவும் ஒரு சுவாரஸ்யமான கதை உண்டு. நமது சமையலறைக்கு வரும் ஒவ்வொரு உப்புக்கள் பின்னாலும் ஒரு பெரிய கதை இருக்கின்றது. என்பதை உப்பு வாய்க்காலில் கடினமாக உழைக்கும் தொழிலாளர்களைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். புத்தளத்தில் இருக்கின்ற பல்வேறுபட்ட வளங்களில் ஒரு முக்கியமான இடத்தை பிடித்திருக்கின்ற ஒரு வளம் தான் உப்பு தளம்.

புத்தளத்திலிருந்த முதலாளிமார்களும் மரைக்கார் மார்களுமே இந்த உப்பு உற்பத்திக்கு ஆரம்ப அடிக்கல் இட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களின் கீழ் பாலாவியிலிருந்து புத்தளம் வரைக்கும் இடையிலான அந்த கரையோர பகுதிகளை உப்பு உற்பத்திக்கான சிறந்த இடமாக அடையாளம் காணப்பட்டு அந்த இடத்தில் தங்களுக்குரிய தொழிலாளிமார்களை வேலைக்கு அமர்த்தி அதன் மூலமாக வருமானங்களைப் பெறக்கூடியதான உப்பு உற்பத்தியை அவர்கள் செய்து வந்தார்கள்.

இந்த உப்பை ஏற்றிக்கொண்டு செல்வதற்காக அவர்களிடையே இருந்த யானைகள், குதிரைகள் என்று பல்வேறுபட்ட விடயங்களை அவர்கள் பயன்படுத்தி உள்ளார்கள் என்பதை வாய்வழிப் பேச்சாக நாம் புத்தகங்களிலிருந்து அறிந்திருக்கின்றோம். அந்த வகையில், 1500 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு உப்பு உற்பத்திக்காக புத்தளத்தில் பாவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காலப்பகுதியில் திடீரென ஒரு சத்தம் கேட்டது. அந்த சத்தம் என்னவென்றால் இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஏவப்பட்ட ஒரு ஏவுகணை புத்தளம் பிரதேசத்தில் கீழடி பிரதேசத்தில் இருக்கின்ற உப்பு வயலிலே விழுந்து அங்கு உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இந்த சத்தத்தைக் கேட்டு அலறி அடித்துக்கொண்டு ஓடி இருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் தான், வாரியா குண்டு என்ற பிரதேசம் கூட நினைவாக என்றும் பேசப்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட ஒரு வித்தியாசமான சம்பவமும் இந்த இந்த பூமியில் நடந்திருக்கிறது.

ஆங்கிலேயரின் அடிமை சாசனத்தில் நாங்கள் இருந்தபோது அவர்களின் கீழ் இந்த உப்பு நிலங்கள் பரிபாலிக்கப்பட்டன. இந்த உப்பு நிலங்களைப் பரிபாலித்த போது, அங்குச் செய்யப்பட்ட உப்பு அனைத்துமே இந்த ஆட்சியாளர்களிடம் தான் கொடுக்கப்பட வேண்டும் அங்கு இருக்கின்ற பொலிஸார் கூட அந்த இடத்தின் உப்பை எடுத்துக்கொண்டு வேறு இடங்களுக்குச் செல்ல அனுமதிப்பதும் கிடையாது. இந்த இரண்டாம் கட்டையிலே உப்பு தளத்தின் சங்கத்திற்கு முன்னால் அமைந்து இருக்கின்ற பழைமைவாய்ந்த கட்டிடங்களை எடுத்துப் பார்த்தால் கூட, அந்த கட்டிடங்கள் தான் அந்த உப்பை யாரும் கொண்டு போகக் கூடாது என்று உப்பைப் பாதுகாப்பதற்காக ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்கி இருந்த அந்த பழைய கட்டிடங்கள் தான் இன்றும் இரண்டாம் கட்டை என்று இடத்தில் பழைய கட்டிடங்களாகவே அடையாளமாகக் காணப்படுகின்றன.

தங்களுடைய இடத்தில் விளைகின்ற உப்பு எங்களுடைய பாவனைக்காகக் கூடப் பெற முடியாத நிலையில், ஆங்கிலேயர்கள் அவர்களுடைய சட்டங்களை வகுத்து, “நீங்கள் விளைவிக்கும் உப்பு எங்களிடம் தான் தர வேண்டும்” என்று ஒரு சட்டத்தையும் இயற்றி அந்த சட்டத்திலேயே மிகவும் குறைவான விலையில் இந்த உப்புக்காக விலை நிர்ணயித்து ஒரு வருடத்திற்குப் பின்னால் இந்தத் தொகையைக் கொடுக்கின்ற வரலாறு புத்தளத்தில் இருந்திருக்கின்றது.

இதன்போது, 1990களில் புத்தளத்தில் உப்பு போராட்டம் என்ற ஒரு போராட்டம் நடைபெற்றது. இதனை சகோதரர் இலியாஸ் டொக்டர், ஊசி ஹாதி போன்றோர் முன்னிலையில் நின்று இதனை செய்தார்கள். ஆர்ப்பாட்டத்தினை செய்த காரணத்திற்காக இந்த சரியான தீர்ப்பு நீதிமன்றத்திலேயே கொடுக்கப்படுகிறது. அதுதான் இந்த உப்பு இந்த உற்பத்தியாளர்களுக்கு உரியது அவர்கள் தான் அவர்களது உப்புக்கான விலைகளை நிர்ணயிக்க வேண்டும். என்ற தீர்வு கொடுக்கப்பட்டு சுதந்திரமாக இயங்கக்கூடிய உற்பத்தியாளர்களை இந்த தீர்ப்பு உருவாக்கியது. அதன் பின் தான் இந்த புத்தளத்தில் தங்களுடைய நிலங்களில் விளைவிக்கப்படும் உப்புகள் எங்களுக்குப் பிடித்த வேலைகளுக்காக அதனைப் பாவிப்பதற்கு அனுமதி கிடைத்த போது அதன் பிறகு சுதந்திரமாக இயங்கப்பட்டது.

இந்த உப்பு சங்கம் எவ்வாறான விடயங்களை புத்தளத்தில் மேற்கொள்கின்றது என்பதைப் பார்த்தால் பொதுவாக ஒரு ஏக்கர் வாய்க்கால் செய்வதற்கு 10 ஏக்கர் நீர் சேமிப்பு இருக்க வேண்டும். 10 ஏக்கர் நிலப்பரப்பில் நீர் சேமிக்கப்பட்டு இருந்தால் தான் ஒரு ஏக்கர் வாய்க்காலில் உப்பை உற்பத்தி செய்யலாம். அந்த அடிப்படையில், புத்தளத்தில் இருக்கின்ற இந்த உப்பு சங்கத்தில் 400 ற்கும் மேற்பட்ட உப்பு வாய்க்கால்கள் இருக்கின்றன. வாய்க்காலில் அழகாக உப்பு உற்பத்தி செய்யப்படுமாக இருந்தால், 4,000 நிலப் பரப்பிலேயே நீர் சேமிக்கப்பட வேண்டும். ஆனால், புத்தளத்தில் 320 ஏக்கர் நிலப்பரப்பு மட்டும்தான் 400 ஏக்கருக்கான நீர் வளம் சேகரிக்கப்பட்டிருகிறது. “கடந்த காலத்தில் உப்பு சங்கத்துடன் முரண்பட்டுக் கொண்டிருந்த இதன் அடிப்படை வாதமாக நாங்கள் எங்களுக்குள்ளேயே இருக்கின்ற 320 வாய்க்காலுக்கும் 400 ஏக்கரில் தான் நீரை வைத்துக் கொண்டிருக்கின்றோம். இன்னும் ஒரு 20 ஏக்கர் நீரைச் சேமித்துக் கொண்டிருந்தால் எங்களுக்குள் இருக்கின்ற வாய்க்காலுக்குள் நீர் போதாமல் போகும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் அவர்கள் உப்புச் சங்கத்துடன் எங்கள் இடத்திலிருந்து உங்களுக்கு நீர் தர முடியாது” என்ற விடயத்திற்காகப் போராட்டம் செய்திருக்கிறார்கள் இதற்கு இரு பக்கத்திலிருந்தும் நியாயம் இருந்தாலும், இதுதான் அடிப்படை காரணமாக இன்றும் இருக்கின்றது.

அது மட்டுமல்லாமல், இன்னும் ஒரு வித்தியாசமான விடயம் புத்தளத்தில் இருந்திருக்கின்றது. அதுதான் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் அந்தப் பிரதேசத்தில் காடுகள் என்று இந்த அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட முற்று முழுதாக சட்ட விரோதமாக இடித்து அதனை உப்பு வாய்க்காலாகச் செய்து, அதற்கு உப்பு வாய்க்காலுக்குச் செல்வதற்குச் சுற்றி வளைத்து கடல் இருந்தும் செல்வதற்குப் பாதை இல்லாததால் கண்டல் தாவரங்களை அழித்து, அதிலே பாதைகளை அமைத்து அந்த வாய்க்காலகளாக அரச காடுகளை மாற்றி இருக்கின்ற இந்த கேவலமான விடயங்களும் குறிப்பிடத்தக்கது.

இந்த புத்தளத்தின் உப்பு வரலாற்றினை அடுத்த சந்ததிக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதையும் அரசாங்க காணிகள், கடல் வளங்கள், தாவரங்கள், கண்டல் தாவரங்கள் என்று எல்லாவற்றையும் அளிக்காமலும் அவற்றிற்கு எவ்வித பாதிப்புகளை விளைவிக்காமலும், இந்த உப்பு உற்பத்தியினை சட்டவிரோதமற்ற முறையில் செய்யாமல், நீதியான முறைமையில் செய்ய வேண்டும் என்பதும் புத்தள மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

புத்தளத்தின் உப்பளமான இவ்வாறான வரலாற்றினை கொண்டிருந்தாலும் தற்காலத்தில் இந்த உப்பளங்கள் எவ்வாறான நிலையில் உள்ளன என்பதை நோக்க வேண்டியதும் அவசியமாகும்.

புத்தளத்தில் உப்பளங்களை உரிமையாக வைத்திருப்பவர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. உப்பு சங்கத்திற்குக் கட்டுப்பட்டு தொழில்களை மேற்கொள்பவர்கள்
2. உப்பு சங்கத்திற்குக் கட்டுப்படாமல் சுயாதீனமாக உப்புத்தொழிலில் ஈடுபடுபவர்கள்

உப்பு உற்பத்தியினை சுருக்கமாக கூறின், கலப்பு நீரினை எடுத்து கடலில் உள்ள நீரில் இரண்டு தன்மையான காரத்தன்மைகள் உள்ளன. கடல் நீரினை எடுத்து ஒரு தொட்டியில் 3 கிழமைகள் சேமித்து வைக்கும் போது, அந்நீரில் உள்ள காரத்தன்மையானது, 2, 10, 12, 16 என்ற சதவீதத்தில் அதிகரித்துக் கொண்டே செல்லும். அவ்வாறு அதிகரித்துக் கொண்டு செல்லும் வரை, அத்தொட்டியில் நீரானது காரத்தன்மை அதிகரிப்பதற்காகச் சேமித்து வைத்த பின்பு அந்நீரினை வெளியில் எடுத்து, உப்பு உற்பத்திக்காக வெட்டி வைக்கப்படும் சதுர கட்டங்களில் நீரினை பரப்பி வைப்பார்கள். அதன்பின்னர், 16 சதவீதத்திலிருந்து தொட்டியில் விடுவிக்கப்பட்ட காரத்தன்மையானது உப்பினை பரப்பி வைக்கப்படும் தளத்தில் அது ஒரு 28 நாட்களுக்கு மேலாக வெயிலில் இருக்கும் பொழுது அதன் காரத்தன்மையானது, 26 சதவீதத்தை எட்டும் இவ்வாறு முழுமையாக உப்பானது உற்பத்தி செய்து தயார்ப்படுத்துவதற்குக் கிட்டத்தட்ட 60 நாட்கள் தேவைப்படும் .

இவ்வாறுதான் உப்பு சங்கத்திற்குக் கட்டுப்படாத சங்கங்கள் உப்பினை சுயாதீனமாக உற்பத்தி செய்கின்றனர். ஆனால், உப்பு சங்கத்திற்குக் கட்டுப்பட்ட தொழிற்சங்கங்கள் கிட்டத்தட்ட 15, 16 நாட்களுக்குள்ளே உப்பினை உற்பத்தி செய்யக்கூடிய தரத்தினை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, புத்தளத்தில் உப்பு வாய்க்காலில் ஈடுபடும் உப்பு சங்கங்களில் 40 உரிமையாளர்கள் உள்ளனர். இந்த உப்பு உற்பத்தியின் மூலம் கோடிக்கணக்கான வருவாயானது உப்பின் மூலம் புத்தளத்துக்கு வருகின்றது. ஆனால், இச்சங்கத்தினால் தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் எவ்வித செயற்பாடுகளும் நடப்பதில்லை. எனவே, இவ்வாறு உப்பு உற்பத்தியில் மூலம் தொழில்களில் ஈடுபடுகின்ற உரிமையாளர்கள் எதிர்காலத்தில் இந்த உப்பு வாய்க்காலுக்காக அனுப்பப்படும் காரத் தன்மையான தண்ணீரைத் தொட்டியிலிருந்து விலை கொடுத்து வாங்குவதற்கான திட்டத்தையும் கொண்டு வர வேண்டும். மேலும், இந்த உப்பு உற்பத்தியின் உரிமையாளர்கள் முதலாளிமார்கள் சமூகத்தில் மக்களது வாழ்வாதாரங்களை உயர்த்தக்கூடிய வகையில், அவர்களுக்கான ஒரு உதவி திட்டத்தையும் வழங்குவதில் பங்குகொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.



### அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில்

# “கதிர்காமத் திருமுருகன்”



உலகளவிய ரீதியில் இருக்கும் முருக பக்தர்களை ஒருங்கிணைத்து, இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் 2024 ஆகஸ்ட் 24, 25ஆம் திகதிகளில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தப்பட்டது. இதில், தமிழ்நாடு பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் கதிர்காமத் திருமுருகன் வெளியிடப்பட்டது.



பதுளை வ.ஞானபண்டிதன் எழுதிய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்லத்துரை சுதர்சனால் எட்டாவது செம்பதிப்பாக உருவாகிய ‘கதிர்காம திருமுருகன்’ என்ற ஆய்வு நூல், பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டில் தமிழ்நாடு அற நிலைத்துறை அமைச்சர் டி.கே.சேகர்பாபுவினால் வெளியிடப்பட்டு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வழங்கப்பட்டது.


ஞானபண்டிதனின் ‘கதிர்காமத் திருமுருகன்’ நூலை மறுபதிப்புச் செய்யும் முயற்சியில் இலக்கிய விமர்சகரும் எழுத்தாளருமான பேராசான் மு.நித்தியானந்தன் (லண்டன்) எடுத்த தீர்க்கதரிசனமான முயற்சி வெற்றியளித்துள்ளது.

பதுளை வ. ஞானபண்டிதன், பதுளை சமத்துவ சங்கத் தலைவராகப் பணியாற்றியவர். சாதிய அடக்குமுறைக்கு எதிரான பிரசாரகராகவும் செயற்பாட்டாளராகவும் மலையகத்தில் இயங்கியவர். சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்னத கருத்தோட்டங்களை மலையக மக்கள் மத்தியில் ஊன்றச் செய்தவர். கதிர்காமத்தின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவர். பதுளையில் கதிர்காமத் தொண்டர் படையை உருவாக்கியவர். அவர் தமது நீண்டகால ஆராய்ச்சியின் பயனால் ‘கதிர்காமத் திருமுருகன்’ என்ற இந்த அரிய நூலை 84 ஆண்டுகளுக்கு முன்னர் (1940) எழுதியவர்.

இந்நூல் பற்றி கலாநிதி செல்லத்துரை சுதர்சன், குறிப்பிடும்போது அமரர் வ.ஞானபண்டிதன் எழுதிய இந்நூல் கதிர்காமத் தலத்தின் கடந்த காலத்தையும் சமகாலத்தையும் படம் பிடித்துக் காட்டுவது. பலரும் ஆராய்ந்து அறியத் தயங்கும் சட்ட மூலங்களில் கைவைத்து ஆராய்ந்து வெளிப்படுத்துவது. தலத்தின் தொன்மை வரலாறு, காலனிய கால நிலவரம் அவர் எழுதிய காலச் சூழல் போன்றவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுவது. முருகனைச் சிங்களவர்கள் கைப்பற்றிய வரலாற்றைக் கூறுவது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கதிர்காமத் தலத்தைத் தமிழர் பதியே என்று துணிந்து நிறுவுவது.

‘மலையகம் 200’ காணும் இக்காலத்தில் செம்பதிப்பாய் வெளிவருவது வரவேற்பிற்குரியது என்று கூறுகிறார்.


மலையக சமுதாயத்தின் இலக்கியத்தின் நூல் வெளியீட்டின் ஆத்மிகத்தின் மையமாகத் திகழும் எச்.எச்.விக்ரமசிங்க இந்த ஆண்டில் பவளவிழாக் காண்கிறார். கலை ஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் சார்பில் அவர் வெளியிட்டிருக்கும் நூல்கள் தமிழ் உலகில் தனி முத்திரை பதித்தவை. திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சன்னிதானம் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், சிரவை யாதீனம் கௌமார மடாலயம் திருப்பெருந்திரு குமரகுருபர சுவாமிகள், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மலேசியா முன்னாள் அமைச்சர் எம்.சரவணன் உட்பட மாநாட்டில் கலந்து கொண்ட மகான்களுக்கும் அடியார்களுக்கும் பிரதிகளை எச்.எச்.விக்ரமசிங்க வழங்கி வைத்தார்.







# ‘ரசவாதி’ புத்தகத்தின் பார்வை



சி.கதீசனா,
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

‘ரசவாதி’ எனும் கதையில் வரும் இளைஞன் சான்டியாகோவின் வாழ்க்கை பயணம் சாகசங்கள் நிறைந்ததாகவும் அதற்கு மத்தியில அவனுடைய கனவு நிறைவேறியதாகவும் அவனுடைய கனவை நனவாக்குவது தான் அவனுடைய கனவு நிறைவேறியதாகவும் ஒருவனுடைய கனவை நனவாக்குவது தான் ஒரே கடமையாகும் என்பதை ரசவாதி எனும் நூலின் கருப்பொருளாக குறிப்பிடலாம்.

'ரசவாதி' என்னும் நூலின் அமைப்பு முறை யைப் பார்க்கும்போது 9-13ஆம் பக்கங்களில் மொழிபெயர்ப்பாளரின் முன்னுரையும் 13- 19ஆம் வரையான பக்கங்களில் நூலாசிரியரின் முன்னுரையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முதலாம் பாகம், இரண்டாம் பாகம், முடிவாக என்ற பகுதியாக பிரிக்கப்பட்டு கதை அமைந்துள்ளது. கதை நிறைவடைந்த பின்னர் சாண்டியக்கோ பயணித்த பாதையின் வரைபடம் காணப்படுகிறது. பாலோ கொயலாவுடன் சுவாரசியமான ஒரு பேட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக மொழிபெயர்ப்பாளர் குறிப்பு, நூலாசிரியர் குறிப்பு போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலோ கொயலோ எழுதிய 'ரசவாதி' என்னும் புத்தகமானது தன்னுடைய கனவுகளை பின்தொடர்ந்து செல்லும் ஒருவனைப் பற்றிய கதையாகும். இது முதன்முதலில் போர்த்துக்கீசிய மொழியில் 1988இல் வெளியிடப்பட்டது. இவ் ரசவாதி நாவல் ஒரு இளம் ஆன்டலூசியன் மேய்ப்பன் எகிப்தின் பிரமிடுகளுக்கு பயணம் செய்யும்போது அங்கு ஒரு புதியலைக் கண்டுபிடிப்பதற்கான தொடர்ச்சியான கனவை பின் தொடர்கிறது. அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிடுகின்ற உலகின் மிக அதிகம் விற்பனையாகுகின்ற நூல்கள் பட்டியலில் ரசவாதி நூலும் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த பத்து நூல்களில் இதுவும் ஒன்றாகும். இவ் நூலானது வார்த்தைகளின் தேர்வு, குறைபாடற்றது, ஞானம் மற்றும் தத்துவம் நிறைந்தது. ஒரு சாதாரண இளைஞனின் கதையின் மூலம் நம்பிக்கை, நம்பிக்கை இன்மை மற்றும் ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை புத்தகம் வலியுறுத்தி உள்ளது. இந்த புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் தூய்மையான ஆத்மார்த்தமானவை இந்த புத்தகம் ஒரு மனிதகுலம் தனது விதியை வெற்றிகரமாக அடைய சூழ்நிலைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதை வரையறுக்கிறது.

இக்கதையின் சாரம்சமானது, ஆடு மேய்க்கும் சிறுவன் சந்தியாகு இயற்கையின் மீது அதீதக் காதல் கொண்டவன். அதே அளவிலான காதல் பயணம் செய்வதிலும் உண்டு. ஆடுகள் தான் சொல்வதைக் கேட்கவும் புரிந்துகொள்ளவும் கூடியவை என்று நம்பும் இந்தச் சிறுவன், தான் வாசிக்கும் புத்தகங்களில் பிடித்த வரிகளை ஆடுகளுக்கும் வாசித்துக் காட்டுவான். ஒரு புதையலைப் பற்றி இரு முறை கனவு கண்ட சந்தியாகுவுக்கு அந்தக் கனவின் பலனை ஒரு நாடோடிப் பாட்டி சொல்கிறாள். அதற்குக் கைமாறாக, கிடைக்கவிருக்கும் புதையலில் தனக்கும் ஒரு பங்கைக் கேட்கிறாள். உன் இதயம் சொல்வதைக் கவனி. அதற்கு எல்லாம் தெரியும். உன் இதயம் எங்கேயிருக்கிறதோ அங்கே உனக்கான புதையலும் இருக்கிறது” என்று ரசவாதி சொல்ல, சந்தியாகு பிரமிடை அடைகிறான். சந்தியாகு தேடி வந்த புதையல் தொடக்கத்தில் அவன் இருந்த பாழடைந்த தேவாலயத்தில் இருந்தது. அப்பொழுது அவன் கையில் மண்வெட்டி இருந்தது என்று நாவல் முடிவடைகிறது. இவ்வாறாக சாராம்சம் அமைந்துள்ளது.

ஒருவர் தன்னுடைய புத்தகங்களுடன் தனிமையில் இருப்பது சிறந்தது.




நீ எதையேனும் அடைய விரும்பும் போது இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சமும் உனக்கு உதவுவதற்காகக் காய்களை உனக்கு சாதகமாக நகர்த்தும்.

ஒருவர் ஒரு தீர்மானம் மேற்கொள்ளும் போது அதற்கு முன்பு தான் ஒருபோதும் கனவில் கூட நினைத்திராத இடங்களுக்கெல்லாம் தன்னை அழைத்துச் செல்லக் கூடிய ஒரு வலிமையான நீரோட்டத்திற்குள் அவர் குதிக்கின்றார் என்று பொருள்.

தங்களுக்குத் தேவையானவற்றையும் மிகவும் விருப்பமானவற்றையும் அடைவதற்கான திறன் மக்களுக்கு இருந்தால் தங்களுக்குத் தெரியாதவற்றைக் குறித்து அவர்கள் பயம் கொள்ளத் தேவையில்லை என்பது அல்லாவின் அறிவுரை என்று கூறப்பட்டுள்ளது. இந்த பூமியில் இருக்கும் எல்லாமே தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது ஏனெனில் இந்த பூமி ஜீவன் உள்ள ஒன்று. அதற்கு ஒரு ஆன்மா இருக்கின்றது. நாம் அந்த ஆன்மாவின் ஒரு பகுதி நிகழ்காலத்தை நீ மேம்படுத்தினால் பின்னால் வருகின்ற விஷயங்களும் சிறப்பானவையாக இருக்கும். ஒருவனுடைய வாய்க்குள் போகின்ற விடயம் தீயது அல்ல அதனுடைய வாயிலிருந்து வெளி வருகின்ற விஷயம்தான் பெரும் கேடு விளைவிக்கிறது. உன் இதயம் எங்கே இருக்கின்றதோ அங்கே தான் நீ உன்னுடைய புதையலைக் கண்டுபிடிப்பாய் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

கடவுள் இவ்வுலகத்தைப் படைத்ததற்கான காரணம் பார்வைக்குப் புலப்படக்கூடிய அதனுடைய பொருட்களின் ஊடாக அவருடைய ஆன்மீக போதனைகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவருடைய ஞானத்தைக் கண்டு அவர்கள் அதிசயிக்க வேண்டும் என்பதற்காகவும் தான் அதைத்தான் நான் செயல் நடவடிக்கை என்று கூறுகின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் தன் கனவைப் பின்தொடர்ந்து செல்வதிலிருந்து காதல் ஒருபோதும் அவனைத் தடுக்காது என்று தன்னிடம் கூறிய ஒரு பெண்ணை தன்னால் சந்திக்க முடிந்ததற்காகவும் அவன் நன்றி கூறினான்.

ஒவ்வொரு தேடலும் துவக்க ஆட்டக்காரரின் அதிர்ஷ்டத்துடன் தான் தொடங்குகிறது. அதுபோலவே, ஒவ்வொரு தேடலும் அந்த வெற்றியாளர் தீவிரமாகச் சோதிக்கப்படுவதோடு நிறைவு பெறுகிறது.

உன்னுடைய இதயம் எங்கே இருக்கிறதோ அங்கே தான் உன் புதையல் இருக்கும் என்று அந்த ரசவாதி கூறியிருந்தார்.

இவ்வாறாக இக் கதை மூலம் சமூகத்திற்குப் பல நற்கருத்துக்களை நேரடியாகவே கூறியுள்ளார்.

உண்மையில் ஒன்றை விரும்பும்போது பிரபஞ்சமே அதைத் தரும் என்ற ரசவாதியின் வார்த்தைகளை, நாம் அதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சியில், இடைவிடாத் தேடலில் கிடைக்கும் வெற்றியாகப் புரிந்துகொள்ளத் தோன்றுகிறது. இயற்கையைப் புரிந்துகொண்டால் உலகின் மொழியை, பிரபஞ்சத்தின் ஆன்மாவைப் புரிந்துகொள்ள முடியும் என்ற வரிகளைத் தத்துவம் சார்ந்தவையாக மட்டுமின்றி யதார்த்தம் சார்ந்தும் அறிவியல் சார்ந்தும் பொருள்கொள்ள வேண்டும் எனத் தோன்றுகிறது.

வாழ்வின் பாதையில் மிகச் சரியாகப் பயணப்பட வேண்டுமென்றால், இதயம் சொல்வதைக் கவனமாகக் கேள் என்ற இந்நாவலின் கருத்து, சகுனங்களின் மீது நம்பிக்கையற்றவர்கள், சகுனங்களை தமது உள்ளுணர்வுகளாகப் புரிந்துகொள்வதற்கான தளத்தைத் திறந்துவைக்கிறது. மிக அழகிய மொழி நடையில் அமைந்த ரசவாதி, இயற்கையை அழகியலோடும் தத்துவத்தோடும் இணைத்துக் காட்டுகிறது.

கனவுகளையும் அவை தரும் பயணங்களையும் எப்பொழுதும் வாழ்விற்கு வளம் சேர்க்கும் கூறுகள் என்னும் ரசவாதி, கனவாக இருந்தாலும் அதற்கான தேடலையும் நம்பிக்கை இழையோடும் சந்தியாகுவின் அன்பைச் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. விதியின் வழி தீர்மானிக்கப்பட்டுவிட்ட வாழ்க்கைப் பயணத்தில், மனித அற்புதங்களை விட இயற்கையின் அற்புதத்தையும் எதிர்காலம் ஒளித்துவைத்திருக்கும் ஆச்சரியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது ரசவாதி.

## என் இலக்கை அடைவதற்கு
# எந்த ஆழத்திலும் நீந்த தயார்





ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(செவ்வாய்க்கிழமை தொடர்ச்சி...)

**கேள்வி: உங்கள் பயிற்றுவிப்பாளரான கேப்ரல் ரொஷான் அபேசுந்தர அவர்களது ஒத்துழைப்பு எவ்வாறு இருந்தது?**

இன, மத பேதத்தால் அழிந்த நாட்டின் நல்லிணக்கத்தை இத்தகைய விளையாட்டுகள்தான் கட்டியெழுப்புகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக என் பயிற்றுவிப்பாளர் காணப்படுகிறார். 2021ஆம் ஆண்டு தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச் சென்று, மீளவும் அங்கிருந்து தலைமன்னாருக்கு 28 மணி நேரம் 19 நிமிடங்கள் 58 செகன்களில் நீச்சலை நிறைவு செய்து, ஆழிக்குமரன் ஆனந்தன் ஏற்படுத்தியிருந்த 51 மணி நேர சாதனையை முறியடித்த சாதனையாளர் என் பயிற்றுவிப்பாளர். மேலும், பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க ஆறு பேருக்கு நீச்சல் பயிற்சியை வழங்கிக் கொண்டிருக்கிறார். என் பயிற்றுவிப்பாளரது சாதனை நேரத்தை நான் முறியடிக்க வேண்டும் என்பதே அவரது ஆசையும் எதிர்பார்ப்பும் ஆகும். கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வருகை தந்து எனக்கான நீச்சல் பயிற்சிகளை வழங்குவதால் அவரது அரச பணியில் சவால்கள் ஏற்பட்டன. இதனால் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து விமானப்படைத் தளபதிக்கு கடித தொடர்புகள் ஊடாக இவரது பணி சிக்கல்களுக்கு தீர்வு எடுக்கப்பட்டது. எனது சாதனைப் பயணத்தில் பெற்றோர்களைப் போல என் பயிற்றுவிப்பாளரும் எனக்கு உறுதுணையாக இருந்தார். உடற்பயிற்சி முதல் உணவுப் பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் வழிநடத்திச் சென்றார்.

**கேள்வி: சாதனையை மேற்கொண்ட பின்னர் உங்களுக்கு கிடைத்த வாய்ப்பு என்ன?**

கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இது எனக்கு கிடைத்த பாரிய வாய்ப்பாக நான் கருதுகின்றேன். மிக முக்கியமாக மக்களின் ஆதரவும் வரவேற்பும் எதிர்பாராத அளவில் இருந்தது.




இதுநாள் வரையிலும் 15 வயது பாடசாலை மாணவனாக இருந்த எனது அடையாளமானது மக்களின் ஆதரவால் இன்று சாதனையாளர் என்னும் அடையாளத்தை பெற்றுள்ளேன்.

**கேள்வி: நீச்சல் பயிற்சிக்காக நீங்கள் கடைப்பிடித்த விசேட பழக்கவழக்கங்கள் எவை?**

பாக்கு நீரிணையை கடப்பதற்கான மூன்று மாத கால பயிற்சியின் போது, தினமும் தவறாது உடற்பயிற்சியில் ஈடுபடுவேன். கோதுமை மா உள்ள உணவுகளை முற்றிலுமாக தவிர்த்தேன். கடுமையான உணவு திட்டத்தை கடைபிடித்தேன். புரதச்சத்து, நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உட்கொண்டேன். செயற்கை புரோட்டின் மிக்ஸ்களை நான்



உட்கொள்ளவில்லை. காரணம் அவை நீண்ட காலத்தின் பின்னர் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அதனை எனக்கு பயிற்றுவிப்பாளர் பரிந்துரைக்கவில்லை.

**கேள்வி: எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்வதற்கான ஆர்வமுள்ளதா?**

Sri Lanka Aquatic Sports union ஊடாகவே இலங்கையில் இருந்து நீச்சல் வீரர்கள் ஒலிம்பிக் மற்றும் பிற சர்வதேச போட்டிகளுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். இதற்கு அடிப்படைத் தகுதியாக குறைந்தது 25 KM நீச்சல் போட்டியில் பங்குபற்றியிருக்க வேண்டும். எனது பாக்கு நீரிணை சாதனையூடாக ஆரம்பக் கட்டத்தை நிறைவு செய்துள்ளேன். எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டிக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாக பங்குகொள்வேன்.

**கேள்வி: இளைஞர்களுக்கும் சமூகத்திற்கும் நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டு அதனை வளர்ப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குங்கள். எதிர்மறையான சிந்தனைகளை தோற்றுவிக்கும் "உன்னால் முடியாது" என்ற வார்த்தைகளை ஒருபோதும் கூறாதீர்கள். உங்கள் பிள்ளைகளை பிற பிள்ளைகளுடன் ஒப்பிட்டு பேசாதீர்கள். பிள்ளைகளின் தனிப்பட்ட திறனை வளர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுங்கள். ஒவ்வொருத்தரும் உங்கள் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டே இருங்கள். நிச்சயமாக என்றோ ஒருநாள் உங்கள் இலட்சியத்தை எட்டிப் பிடிப்பீர்கள். அதேபோல, கல்வி அறிவு மட்டுமே வாழ்வின் உச்ச இடத்தை எட்டச் செய்யும் என்று நினைக்காதீர்கள். பிள்ளைகளின் திறமைகள் துறை சார்ந்த அறிவினூடாகவும் வாழ்வின் உச்ச இடத்தை அடையலாம்.

போதைப் பழக்கத்திற்கு அடிமையாகும் இளைஞர் சமூகத்திற்கு மத்தியில் தன் பெற்றோர்க்கும் தன்னைப் போன்ற மாணவச் சமுதாயத்திற்கும் எடுத்துக்காட்டாக பஹ்மி ஹசன் சலாமா காணப்படுகிறார். இத்தகைய இளம் சாதனையாளர்களை உலகறியச் செய்து எதிர்கால சந்ததியினரை நல்வழியில் வழிநடத்தி, இன, மத பேதமின்றி திறமைக்கு வழி விட்டு சகோதரத்துவத்துடன் இணைந்து பயணிப்போம்.

(முற்றும்)





# மலையகம் 200



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

**வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, நாணய மதிப்பிறக்கம் போன்றவற்றின் காரணமாக இன்று இவர்கள் பெரும் சம்பளமானது அவர்களது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டுசெல்ல கடினமாக உள்ளது**

**சம்பளங்கள், சலுகைகள் தொடர்பான சட்ட திட்டங்களையும், அவற்றின் குறைபாடுகளையும், முக்கியத்துவத்தையும், அறிந்து அது சம்பந்தமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்**

**வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கமும், தொழிற்சங்கங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பொருத்தமானதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது கட்டாயம்**

இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்கின்ற மலையக மக்கள் இந்த தீவகத்திற்கு வந்து கடந்த வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியாகின.

இதனையொட்டி, 'மலையகம் 200' என்ற நிகழ்வு ஸ்ரீலங்காவிலும். உலகின் பல்வேறு நாடுகளிலும் நிகழ்ந்து கொண்டிருந்ததானது சிறப்பான அம்சமாகும்.

இந்த நிகழ்வுகளின் மூலம் மலையக மக்களின் யதார்த்த நிலையினையும், அவர்களின் வரலாற்றுப் பின்னணியையும் உலகிற்கு வெளிப்படுத்தி, அதன் மூலம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்பது அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை.

இலங்கையின் மத்தியப் பிரதேசத்தில் பத்து ஏக்கருக்கு மேல் 'தோட்டம்' என்று 1889ஆம் ஆண்டு தொழிற் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தொழிலாளர்கள் அவர்களின் அரசியல் நிலையின்மை காரணமாகத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தது ஒரு கசப்பான உண்மையாகும்.

பெருமளவு அந்நிய செலாவணியையும், மறு வார்த்தையில் கூறின், இறக்குமதிகளில் பெரும் விகிதாசாரத்தினை பெற்றுத் தருவதற்கு உதவி செய்பவர்கள் இந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களே.

தோட்டங்கள் நிலமானிய முறையில் முதலாளித்துவ அமைப்பினை வற்புறுத்திய அம்சங்களாகத் திகழ்ந்திருந்தன.

நிலமானிய முறையின் அழிவில் உருவான முதலாளித்துவ முறை, அது தொடர்ந்திருக்க முதலாளித்துவ முறையைப் புகுத்தியமை, தொழிலாளர்களைத் தொழிலாள அடிமைகளாக்கி விட்டிருக்கின்றது.

இந்த நிலை இங்கு மாத்திரம் அல்ல, எங்கெல்லாம் தோட்டங்கள் திறக்கப்பட்டனவோ அங்கெல்லாம் காணப்படக்கூடிய ஒரு பொதுவான நிலையாகும்.

"இலத்தின் அமெரிக்க நாடுகளில் நிலமானிய முறையினை முற்றிலும் அழிக்காமல் முதலாளித்துவத்தைப் புகுத்தியபோது, அங்கு இரட்டைத் தன்மை பொருந்திய சமுதாயம் உருவானது . அதனால், நகர்ப்புறங்களில் முதலாளித்துவ சமுதாயமும், கிராமப் புறங்களில் நிலப் பிரபுத்துவ சமுதாயமும் உருவாகின" என Carles Fuentes என்ற மெக்சிகோ நாட்டு நாவல் ஆசிரியர் ஒரு கட்டுரையில் எழுதி இருக்கின்றார்.

தொழிலாளர்களாக வாழ்ந்தாலும், அவர்கள் நிலப் பிரபுத்துவ சமுதாயத்துப் பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாக வாழ்ந்து வந்தது அவதானிக்கப்பட்டது.

அந்நியராட்சி தொட்டு அவர்களது இன்னல் மிகு வாழ்க்கையினையும், பிரதிபலிப்பினையும், சமுதாய மேலதிக முதலீடுகள் மறுக்கப்பட்ட நிலையில், நேரடி உற்பத்தி முதலீடுகள் விரும்பப்பட்டு, அதனைத் தொடர்ந்து, ஏற்படுகின்ற கட்டாய தொடர்ச்சிகளினால் வங்கி, போக்குவரத்து போன்ற இன்னொரன்ன அம்சங்கள் ஏற்படுவதனையும், பொருளாதாரத் துறையில் இந்த துறையின் பங்கு எந்த அளவு என்பதனையும், அன்று தொட்டு நிலவி வருகின்ற பல்வேறு வகையான சம்பளங்கள், சலுகைகள் தொடர்பான சட்ட திட்டங்களையும், அவற்றின் குறைபாடுகளையும், முக்கியத்துவத்தையும், அறிந்து அது சம்பந்தமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

நகர, கிராமிய, தோட்டத்துறையென வகுத்து, அவர்கள் ஈடுபடும் பொருளாதார நடவடிக்கையைப் புள்ளி விபர அடிப்படையில் மதிப்பிடும்பொழுது, இலங்கைப் பொருளாதாரத்திற்கு அதிக அளவில் உழைத்துக் கொடுப்பவர்கள் இந்த தொழிலாள வர்க்கத்தினரே என்பது தெளிவு.

இவர்கள் பெரும் வேதனம், இந்த நாட்டில் ஏனைய தொழிலாளர்கள் பெரும் வேதன அளவை விடக் குறைவாக உள்ளது என்பது மிகவும் விசித்திரமான வேதனை மிக்க அம்சங்கள்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, நாணய மதிப்பிறக்கம் போன்றவற்றின் காரணமாக இன்று இவர்கள் பெரும் சம்பளமானது அவர்களது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்ல கடினமாக உள்ளது.

சம்பள அதிகரிப்பு தொடர்பாக அவ்வப்போது அறிக்கைகள் வெளி வருவதுவும் பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதனையும், ஊடக வாயிலாக அறிவது கவலையைத் தரக் கூடிய விடயமாகும்.

தோட்டத்தில் மேற் கொள்ளப்படும் பெரும்பாலான தொழில்கள், உழைப்பு செறிவானவை என்பதனால் வேலை நாட்கள் குறைக்கப்பட்டு வருவதனையும் காண முடிகின்றது.

அவர்களது கல்வி வளர்ச்சி, சுகாதார, ஆரோக்கிய மேம்பாடு, வீட்டு வசதி, அரச உத்தியோகத்தில் இவர்களது உள்ளீர்ப்பு, அரச உயர் பதவிகளில் இவர்களது பங்களிப்பு, தனியார்த் துறைகளில் அவர்களின் வேலை வாய்ப்பு, தனியார்த் துறைகளில் நிறைவேற்று அதிகாரங்களில் இவர்களது பங்களிப்பு, வர்த்தக, முதலீட்டுத் துறைகளில் இவர்களது செயற்பாடுகள், பிற நாடுகளுக்குத் தொழில் வாய்ப்பு ரீதியிலான நகர்வு, வெளிநாடுகளுக்கு குடிபெயர்வு, சுய வேலை வாய்ப்பு, வாழ்க்கைத் தரம் போன்ற இன்னோரன்ன விபரங்களை அறிந்து ஆராய்வதானது இவர்களின் இன்றைய நிலை பற்றிய முழுமையான பார்வையைத் தெளிவுபடுத்தும் என்பதுடன், எவ்வாறானதொரு எதிர்கால நடவடிக்கைகளை இவர்கள் சார்பாக மேற்கொள்ள முடியும் என்பதற்கு வழி சமைப்பதாகவும் அமையும்.

இவ்வாறான அம்சங்களோடு 'தோட்டம்' என்ற ஒரு வகையில், குடிமை முறை சமுதாய நிலையோடு ஒப்பிடத்தக்கப் பகுதியில் வாழ்கின்ற தொழிலாளர்கள், அதிக அளவில் நாட்டுக்காக உழைத்து போதுமான பொருளாதார வசதியற்று திகழ்வதனையும், அதற்காக அரசாங்கமோ, பிற சமூக கண்ணோட்ட நிறுவனங்களோ எடுத்து வரும் நடவடிக்கைகளையும் அவை எந்த அளவுக்குத் தொழிலாளரின் நிலையை மேன்மையுறச் செய்கின்றது என்பதனை ஆராய்வதும் அவசியம்.

இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கமும், தொழிற்சங்கங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பொருத்தமானதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் காலத்தின் கட்டாயம் ஆகும்.

டாக்கா

### இடைக்கால அரசத் தலைவரால்

# பங்களாதேஷில் புது சர்ச்சை

பங்களாதேஷ் இடைக்கால அரசு தலைவர் முகமது யூனுஸ், முஸ்லிம் மத பிரிவினைவாதி தலைவர் மமுனுல் ஹக்-ஐ சந்தித்துள்ள புகைப்படம் இணையத்தளத்தில் வைரலாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இட ஒதுக்கீடு தொடர்பாக, மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையில் முடிந்தது. அந்நாட்டு பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்து விட்டு, நாட்டை விட்டு வெளியேறிய நிலையில், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் பங்களாதேஷில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது.



இந்நிலையில், டாக்காவில் முகமது யூனுஸ், முஸ்லிம் மத பிரிவினைவாதி தலைவர் மமுனுல் ஹக் மற்றும் அவரது குழு உறுப்பினர்களை சந்தித்த புகைப்படம் இணையதளத்தில் பரவி பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

ஷேக் ஹசீனா தலைமையிலான ஆட்சிக் காலத்தில் மமுனுல் ஹக், வன்முறையைத் தூண்டியது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ், கைது செய்யப்பட்டார். தற்போது ஷேக் ஹசீனா நாட்டை விட்டு, வெளியேறியதும் இடைக்கால அரசு, மமுனுல் ஹக் மற்றும் பிற பயங்கரவாத அமைப்பு தலைவர்களை விடுவித்துள்ளது.

நாட்டின் மிகப்பெரிய இஸ்லாமியக் கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமி மீதான தடையையும் இடைக்கால அரசு நீக்கியது. தற்போது பங்களாதேஷில் இந்துக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. இந்த சூழலில், பிரிவினைவாதியுடனான முகமது யூனுஸின் சந்திப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஷான்டாங்



### மாணவர்கள் மீது பேருந்து மோதி

# 11 பேர் பலி

சீனாவில் நின்று கொண்டிருந்த மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது பேருந்து மோதியதில், 10 மாணவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு சீனாவில் ஷான்டாங் மாகாணத்தில் உள்ள தையான் நகரில் உள்ள ஒரு நடுநிலைப் பாடசாலையின் வாயிலில், செவ்வாய்க்கிழமை(03) காலை பேருந்துக்காக காத்திருந்த மாணவர்கள் மீது பேருந்து மோதி விபத்துக்குள்ளானது. இதில் 11 பேர் பலியான நிலையில், 13 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், விபத்துக்குள்ளான பேருந்து மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காகவே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில் விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வொஷிங்டன்

### அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக

# நுழையும் இந்தியர்கள் அதிகரிப்பு



கனடா எல்லை வழியாக அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அமெரிக்க எல்லை பாதுகாப்புத்துறை ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

அந்த ஆய்வில் வெளியான விபரங்கள் பின்வருமாறு,

“கனடா எல்லை வழியே அமெரிக்காவுக்குள் நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத அளவு உயர்ந்துள்ளது. ஜூன் மாதத்தில் மட்டும் 5,150 இந்தியர்கள் சட்ட விரோதமாக அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்துள்ளனர். ஜூன் மாதத்தோடு ஒப்பிடுகையில், நடப்பாண்டில் இதே காலகட்டத்தில் 47 சதவீதம் சட்டவிரோத நுழைவு அதிகரித்துள்ளது.

அமெரிக்கா- கனடா எல்லையானது உலகின் மிக நீளமான பாதுகாப்பற்ற எல்லையாகும். அமெரிக்க மக்கள் தொகையில், இந்திய அமெரிக்கர்கள் 1.5% உள்ளனர். அனைத்து வருமான வரிகளிலும் 5 முதல் 6 சதவீதம் செலுத்துகின்றனர்.

அதேபோல், இங்கிலாந்தில் துறைமுகத்தில் தஞ்சம் கோரும் இந்தியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கடந்த 2021இல் 1,170 பேர் குடிபெயர்ந்துள்ளனர். நடப்பாண்டு இதுவரை 475 பேர் புகலிடம் கோரி பதிவு செய்துள்ளனர்” இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பரிதாபாத்

### பசு கடத்துவதாக எண்ணி

# மாணவன் படுகொலை



பசு கடத்துவதாக தவறுதலாக நினைத்த கும்பல், மாணவன் ஒருவரை படுகொலை செய்த சம்பவம் ஒன்று ஹரியானா மாநிலம், பரிதாபாதில் அரங்கேரியுள்ளது.

பசு பாதுகாவலர்களான அனில் கௌசிக், வருண், கிருஷ்ணா உள்ளிட்ட சிலருக்கு பசுக்கள் கடத்தப்படுவதாக தகவல் கிடைத்ததையடுத்து, அவர்கள் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் படேல் சவுக் அருகில் கண்காணிப்பில் இருந்துள்ளனர்.

அப்போது ஆர்யன் மிஸ்ரா என்ற 12ஆம் வகுப்பு மாணவன் ஒருவர், தன் நண்பர்களுடன் காரில் வந்து கொண்டிருந்த நிலையில், காரை தடுத்து நிறுத்திய பசு பாதுகாவலர்கள் அவர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஆயுதங்களுடன் ஒரு கும்பல் தங்களை வழிமறிப்பதைக் கண்ட ஆர்யன் மிஸ்ராவும் அவரது நண்பர்களும் பயந்து போய், தங்களைத் தான் அவர்கள் கொல்ல வந்திருப்பதாக நினைத்து தப்பிக்க எண்ணி காரில் வேகமாக சென்றுள்ளனர்.

> “ மாணவன் உள்ளிட்டோரை கும்பல் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது

பசுக் கடத்தல்காரர்கள் என்பதால் தான் அவர்கள் தப்பிப்பதாக நினைத்த குறித்த கும்பல், மற்றொரு காரில் அவர்களை விடாது துரத்தியுள்ளதோடு, கத்புரி அருகே மாணவன் உள்ளிட்டோரைத் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் காரில் இருந்த ஆர்யன் கழுத்தில் குண்டு பாய்ந்து சம்பவ இடத்திலேயே பலியானார்.

பின்னர் விடயத்தை அறிந்த அந்த கும்பல், உடனடியாக அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், பொலிஸார், தப்பியோடிய 5 பேரைத் தீவிர தேடுதல் வேட்டைக்குப் பின்னர் கைது செய்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஹரியானா

### தூய்மைப்பணியாளர்களாக

# மாறும் பட்டதாரிகள்




ஹரியானாவில் வேலையின்மை காரணமாக 46,000க்கும் மேற்பட்ட பட்டதாரிகள், தூய்மைப் பணியாளர் வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த 4 மாதங்களில் ஹரியானாவின் ‘ஹரியானா கௌஷல் ரோஸ்கர் நிகம்’ மூலம் 46,000க்கும் மேற்பட்ட இளநிலை மற்றும் முதுகலை பட்டதாரிகள், ஒப்பந்த அடிப்படையில், தூய்மைப் பணியாளர் பணிக்கு விண்ணப்பித்துள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

வேலையின்மை காரணமாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாகவுமே பட்டதாரிகள் பலர் இந்த வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி முதல் செப்டம்பர் 2ஆம் திகதி வரை 39,990 பட்டதாரிகள் மற்றும் 6,112க்கும் மேற்பட்ட முதுகலை பட்டதாரிகள் வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர். மேலும், 12ஆம் வகுப்பு வரை படித்த 117,144 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

### பாகிஸ்தானுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதலாவது போட்டியை பங்களாதேஷ் வென்ற நிலையில், ராவல்பின்டியில் வெள்ளிக்கிழமை (30) ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை (03) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றதோடு 2-0 என்ற நிலையில் தொடரைக் கைப்பற்றியது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பாகிஸ்தான்: 274/10

(துடுப்பாட்டம்: சைம் அயூப் 58, ஷண் மசூட் 57 (69), சல்மான் அக்ஹா 54, பாபர் அஸாம் 31, மொஹமட் றிஸ்வான் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 5/61, தஸ்கின் அஹ்மட் 3/57, ஷகிப் அல் ஹஸன் 1/34, நஹிட் ரானா 1/58)

பங்களாதேஷ்: 262/10

(துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 138, மெஹிடி ஹஸன் மிராஸ் 78 ஓட்டங்கள். பந்துவீச்சு: குராம் ஷஷாட் 6/90, சல்மான் அக்ஹா 2/13, மிர் ஹம்ஸா 2/50)

பாகிஸ்தான்: 172/10

(துடுப்பாட்டம்: சல்மான் அக்ஹா ஆ.இ 47, மொஹமட் றிஸ்வான் 43, ஷண் மசூட் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் மஹ்மூட் 5/43, நஹிட் ரானா 4/44, தஸ்கின் அஹ்மட் 1/40)

பங்களாதேஷ்: 185/4

(துடுப்பாட்டம்: ஸகிர் ஹஸன் 40, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 38, மொமினுல் ஹக் 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: சல்மான் அக்ஹா 1/17, குராம் ஷஷாட் 1/40, அப்ரார் அஹ்மட் 1/40, மிர் ஹம்ஸா 1/46)

போட்டியின் நாயகன்: லிட்டன் தாஸ்

தொடரின் நாயகன்: மெஹிடி ஹஸன் மிராஸ்.



# ஓய்வு பெறுகிறார் சுவாரஸ்

உருகுவே தேசிய அணியிலிருந்தான தனது ஓய்வை செய்தியாளர் மாநாடொன்றில் திங்கட்கிழமை (02) லூயிஸ் சுவாரஸ் அறிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை(06) நடைபெறவுள்ள பராகுவேக்கெதிரான தனதணியின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியையடுத்து, சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக முன்களவீரரான சுவாரஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 37 வயதான சுவாரஸ் 142 போட்டிகளில் 69 கோல்களைப் பெற்றுள்ளார்.

# ரொனால்டோ மறுப்பு

எதிர்காலத்தில் சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதான செய்திகளை மறுத்துள்ள போர்த்துக்கல்லின் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, யூரோ கிண்ணத் தொடரையடுத்த விமர்சனங்கள் தன்னைப் பாதிக்கவில்லை என கூறியுள்ளார்.

தேசங்களுக்கான லீக் தொடரின் போர்த்துக்கல்லுக்கான குழாமில் 39 வயதான ரொனால்டோ இடம் பெற்றுள்ளார்.



### அவுஸ்திரேலியாவுக்கெதிரான இருபதுக்கு-20 தொடரில்

# பட்லர் விளையாடுவது சந்தேகம்

கெண்டைக்கால் பின்தசைக் காயமொன்றிலிருந்து குணமடைந்து வருவதில் ஏற்பட்டுள்ள பின்னடைவொன்று காரணமாக அவுஸ்திரேலியாவுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர் விளையாடுவது சவாலுக்குள்ளாகியுள்ளது.

இங்கிலாந்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணிக்கு உப அணித்தலைவர் இல்லாத நிலையில், பட்லர் விளையாடாத பட்சத்தில் சாம் கர்ரன் அல்லது பில் ஸோல்ட் அணிக்குத் தலைமை தாங்குவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.




### புளூ நேவி சவால் கிண்ண கிரிக்கெட் தொடர்:

# டொப்ரேங்கை வென்ற விக்டோரியஸ்



■ அஸ்ஹர் இப்றாஹிம்

புளூ நேவி சவால் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது சுற்றுப் போட்டியொன்றில் கல்முனை டொப்ரேங் விளையாட்டுக் கழகத்தை கல்முனை விக்டோரியஸ் விளையாட்டுக் கழகம் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரியஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டொப்ரேங் 16.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று 79 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 04, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.